சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-1	இதழ்-1	மே-2018	தட்சிணை : 6.00/-
MALAR-1	ISSUE-1	MAY-2018	PRICE : 6.00/-



"யாருடைய பாவங்கள் விலக்கப்பட்டு விட்டனவோ
அந்த புண்ணிய சாலிகளே
என்னை அறிந்து கொண்டு வழிபடுகிறார்கள்"

"சாயி மகராஜின் 100வது ஆண்டு குருபூஜை நினைவிதழ்"



உன்னை
நோக்கி
வருகின்றோம்!

ஜெய் சாய் ராம்

சமர்த்தா

நர்ஸ் & டிராவல்ஸ்

ஷீரடி புனித யாத்திரை

OM

Spiritual Journey to Shiridi

சென்னையிலிருந்து விமான பயணம்

Package Price
₹9900/-
prices vary on the marked dates

வி.ஐ.பி.தரிசனம், 4 ஸ்டார் ஹோட்டல்
புனே-சீரடி ஏசி பஸ் உபட

வருகின்றோம்!

ஏப்ரல் : 28-29
மே : 4-5,12-13,25-16
ஜூன் : 1-2

பார்க்கும் இடங்கள்

மஹா கணபதி கோயில், ஸ்ரீ சனிதேவ் கோயில், ரேணுகாதேவி கோயில், வாஹேஸ்வரர் கோயில்

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

சமர்த்தா நர்ஸ் & டிராவல்ஸ்

எண்.11, முதல் மாடி, வெங்டேஸ்வரா அக்ரஹாரம் ரோடு (சாய்பாபா கோவில் எதிரில்)
மைலாப்பூர், சென்னை-4. Email: samarthatoursandtravels21@gmail.com

☎ 98428 20509 / 73734 09000 / 044-4855 7749

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-1 மலர்-1 மே-2018

வெளியிடுபவர் / ஆசிரியர்

V.ஸ்ரீராம்

இணை ஆசிரியர்

S.ஜெயந்தி

விளம்பர பிரிவு

திரு.T. கார்த்திகேயன், கோவை

8778874339

சிட்டி சர்க்குலேசன்

திரு.R. அபிஷேக், சென்னை

7299287250

பொது ஜனத் தொடர்பு

திரு. அன்புக் கண்ணன்

கௌரவ ஆலோசகர்கள்

திரு. L காமராஜ், சென்னை

திரு.B.S.ஹரி கிருஷ்ணன், சென்னை

A.சரண்யா, M.Com

Dr.G.கீர்த்தி சௌந்தர்யா, B.D.S., சென்னை

திரு.N.ராகவேந்திரன், சென்னை

திரு.B.முருகன், சோழவந்தான்

திரு.T.ரவி- குடந்தை

திரு.S.P.பாண்டியன், குடந்தை

வலைதள வடிவமைப்பு

www.saimaharaj.com

திரு.பா.செந்தில் குமாரி

சாயி பக்தி சேவகர்

திரு.சாயிநி மாதவராஜ்.G

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்

எண்:93/34 K.H.ரோடு, 2வது மாடி, (SBI பேங்க் எதிரில்) அயனாவரம், சென்னை 600 023.

செல்: 8825831068, 9941816692

srirambaba1971@gmail.com

ஆசிரியர் பக்கம்...

முதற்கண் இப்பணி செய்ய எம்மை ஆட்டுவிக்கும் எம்சற்குரு நாதர் ஸ்ரீஷிர்டி சாயி பாபாவின் பொற்பாதம் பணிந்தும், எமக்கும் முன்னே பாபாவிற்கு பணி செய்யும் பெரியோர்களுக்கும், தொண்டரடிப் பொடியேனாய் அடியவருக்கும் அடியேனாய் அவர் தம் திருப்பாதம் பணிந்து இச்சாயி சேவா பணியில் இதுவும் இணைகிறது.

இனி இதுவே, இதுவின் கடை மூச்சு உள்ள வரை ஏற்றுக் கொண்ட பணி, வழி, வாழ்வு, என்றும், உறுதி ஏற்றுக் கொள்கின்றது.


வணக்கம் நம் சற்குரு சாயி மகராஜ் திருவருளால் வெளிவரும் ஆன்மீக இதழ் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெருமகிழ்வு.

அநேக இதழ்கள் பாபாவின் புகழ் பரப்பிக் கொண்டிருக்கும் வேளையில் இதுவென்ன செய்யப் போகிறது என எண்ணம் வேண்டா.

இன்னும் மோர் 1000 இதழ்கள் வந்தாயினும் சாயி மகராஜின் புகழையும், அவர் தம் திருவிளையாடல்களையும், எடுத்துச் சொல்ல இதழ்களும், அவைகளின் பிரதிகளும் போதாது.

இருப்பினும் எமது சாயி மகராஜ் மூட நம்பிக்கையற்ற மெய்ஞானக் கருத்துக்களை பக்தர்களிடையே விதைக்கும் என்பதனையும் நிகழவிருக்கும் வாழ்வை வளமாக அமைத்துக் கொள்ள பாபாவின் சத்திய வாழ்வை ஞானத் தேடலோடு பரப்பும் என்றும் கூறிக் கொள்வதில் தனித்தியங்கும்.

சாயி சொந்தங்கள் அனைவரும் ஆதரவு தந்து சுவீகரித்துக் கொள்ள வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கின்றோம்.



சாயி மகராஜ் அடிபணிந்து

ஓம் சாயிராம்



மனசாட்சி...

28.12.2017 காலை 10 மணிக்கு நண்பர் சாயி சேவகர் திரு.மாதவராஜ் அவர்கள் என்னை சந்திக்க வருவதாக டெலிபோன் செய்தார். சொன்னது போல் என்னை சந்தித்தார். வழக்கம் போல் நாங்கள் இருவரும் பாபாவின் கதைகளை பேசிக் கொண்டிருந்தோம். பேச்சு வாக்கில் திரு.மாதவராஜ் அவர்கள் நீங்கள் ஏன் பாபாவை பற்றி எழுத ஒரு பத்திரிக்கை ஆரம்பிக்கக் கூடாது என்றார்.

நான் சிரித்தேன்

ஏன் சிரிக்கறீங்க என்றார்.

இல்லை, பத்திரிக்கை ஆரம்பிச்சு நடத்தறதுன்னா சும்மாவா? நானோ பட்டுப்போன மரம். பாபா புண்ணியத்திலே காலத்தை தள்ளிக்கிட்டு இருக்கேன் என்றேன்.

உங்க பொருளாதார நிலை எனக்குத் தெரியும் நீங்க ஆரம்பித்து நடத்தறது கஷ்டம் தான் ஆனா பாபா ஆரம்பித்து நடத்துறதுல அவருக்கேது கஷ்டம். என்னவோ சொல்லனும்னு தோணியது சொல்லிவிட்டேன். பாரத்தை பாபாவின் மேலே போட்டுட்டு வேலையை ஆரம்பியுங்கள் எல்லாம் பாபா பார்த்துக் கொள்வார் என்றார்.

உங்களை மாதிரி ஆட்கள் ஒத்துழைத்தால் சரி என்றேன்.

பாபா இவர்கள் மூலமாகத்தானே வருவார்.

யாரிடமும் சொல்ல வேண்டாம் வேலை எல்லாம் முடிந்ததும் சொல்லிக் கொள்ளலாம் என்று 01.01.2018 லிருந்து வேலையை ஆரம்பித்து விட்டேன்.

மறுநாள் மாலையில் கோவையில் இருந்து நண்பர் ஒருவர் தொலைபேசியில் அழைத்தார். ஆரம்ப கட்ட நலம் விசாரிப்புகளுக்குப் பின் எதேச்சையாய் அவரிடம் பத்திரிகைப் பணியை விவரித்தேன். நெருங்கிய நண்பர் என்பதனால்.

சட்டென்று என்ன நினைத்தாரோ தெரியவில்லை. என் கையில் தற்போது 3,500 ரூபாய் உள்ளது அதை உங்கள் சாயி மகராஜ் பத்திரிக்கைக்காக காணிக்கை அளிக்கின்றேன் என்று கூறி சொன்னது போல் அனுப்பியும் வைத்து விட்டார்.

இதை நான் சற்றும் எதிர்ப்பார்க்கவில்லை என்னே பாபாவின் கருணை. 1 ரூபாய் கூட இல்லாது ஆரம்பித்த பாபாவின் பணிக்கு முதல் காணிக்கையாக ரூ.3,500/– வந்தது என்னை மேலும் தீவிரமாக சாயி சேவைக்கு தயார் படுத்தியது.



அன்றிரவு கல்லூரியில் படிக்கும் ஓர் அன்புச் சகோதரி தன் பாக்கெட் மணியை மிச்சப்படுத்தி ரூ.100/– ஐ சாயி மகராஜ்க்கு காணிக்கை அளித்தாள். எனக்கு அந்த சகோதரியின் அன்பையும் பாபாவின் மேல் உள்ள பக்தியையும் எண்ணி பார்த்த போது அவள் அளித்த அந்த தொகை கோடி ரூபாய் மதிப்புள்ளதாகத் தெரிந்தது சாயி மகராஜ்க்கு மனதார நன்றி கூறினேன்.

அதற்கடுத்து ஓர் புத்தகக் கண் காட்சியில் என் ஆத்ம நண்பர் திரு.ட. காமராஜ் அவர்களை சந்திக்க நேர்ந்தது. செய்தியைக் கேட்டவுடன் ஒரு முழுப்பக்க விளம்பரத்தை தந்து உதவியதுடன் வேறு ஏதாவது உதவி வேண்டுமானாலும் தயங்காமல் கேளுங்கள் என்றார் அடிப்படையில் தீவிர கிருஷ்ண பக்தரான திரு.ட.காமராஜ் அவர்கள்.

பாபா எந்த ரூபத்திலும் உதவுவார் என்பதற்கு இது ஓர் சாட்சி.

அடுத்த நாள் திரு. மாதவராஜ் அவர்கள் கஜானன் மகராஜ் சமஸ்தானத்தில் இருந்து அறங்காவலர் சாயி என் வாழ்க்கை உன்னோடு தான் ஆசிரியர் திரு.சிவநேசன் இல்லத்திற்கு வருவதாகவும், வந்து கலந்து கொள்ளும்படியும் அழைப்பு விடுத்தார். மாலை 4 மணிக்கு சென்றேன் நிகழ்ச்சிகள் அனைத்தும் மிகவும் அருமையாக நிறைவடைய திரு.மாதவராஜ் அவர்கள் திரு.சிவநேசன் அவர்களிடம் சாயி மகராஜ் புத்தகத்தைப் பற்றி விவரித்து என்னைச் சுட்டிக் காட்டி இவர் தான் ஆசிரியர் என்றார்.

திரு.கி.சிவநேசன் அவர்கள் ஏற்கனவே ஒரு பத்திரிக்கை நடத்திக் கொண்டிருக்கின்றார். (அவர் முழுக்க, முழுக்க, பாபாவிற்கு சேவை செய்வதற்காக பத்திரிக்கை நடத்துகிறார் என்பது எனக்கு அதன் பின்புதான் தெரிந்தது.) அவரிடம் போய் இவர் இன்னுமொரு பத்திரிக்கை நடத்துகிறார் என்றதும் தர்மசங்கடமாய் உணர்ந்தேன்.

என்மேல் தவறில்லை ஏன் எனில் நான் அதுவரை சந்தித்த அனைத்து துறை சார்ந்த நண்பர்களிடமும் போட்டியும், பொறாமையுமே நான் சந்தித்தது, எனக்கு கிடைத்தது எல்லாமே, ஆனால் சாயி மகராஜ் எத்துனை கருணையானவர் என்பதை திரு.கி.சிவநேசன் அவர்களின் மணநிலையின் மூலம் நான் உணர்ந்து கொண்டேன்.

திரு.கி.சிவநேசன் சற்றும் தாமதிக்காமல் ரொம்ப சந்தோசம் சாய்ராம் நல்லா நடத்துங்க என்று வாழ்த்தியதுடன் நில்லாமல் அவரின் மனைவியிடம் சால்வை எடுத்துவரக் கூறி எனக்கு அணிவித்து வாழ்த்தினார்.

யாருக்கு வரும் இம்மனம் பாபாவாக வாழ்பவருக்கல்லவா வரும். சாயி என் வாழ்க்கை உன்னோடு தான் சாயி மகராஜ் குருவைத் தேடிக்கு முன்னோடி என்பதில் சந்தேகமில்லை. திரு.மாதவராஜ்



அவர்களும் அவரின் தாயார் மூலமாக எனக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்தினார்கள்.

புத்தகம் வெளிவரும் முன்பே எனக்கு கிடைத்த இந்த வாழ்த்துக்களை சாயி மகராஜின் வரமாகவும், அனுமதியாகவும் எடுத்துக் கொண்டேன்.

இந்நிகழ்விற்குப் பின் 31.01.2018 அன்று திருவள்ளூர் ஸ்ரீராம் சாய் பாபா அறக்கட்டளை அறங்காவலர் திரு.V.சாய் பத்மா அவர்களின் சந்திப்பு பாபாவின் அருளால் கிட்டியது அவரின் வாழ்த்துக்களையும் பெற்றேன்.

அடுத்து 02.02.2018 சாயி என் வாழ்க்கை உன்னோடு தான் புத்தக வெளியீட்டு விழாவில் திரு.கி.சிவநேசன் அவர்கள், இறைநேசன் ஆசிரியர் திரு.அசோக்குமார் அவர்களை வெளியிட வைத்து என்னை பெற்றுக் கொள்ள வாய்ப்பளித்து வந்திருந்த சாய் பக்தர்களிடம் சாயி மகராஜ் புத்தகத்தைப் பற்றி எடுத்துக் கூறி நான் இறைநேசன் புத்தகத்தைப் பார்த்துத் தான் சாயி என் வாழ்க்கை உன்னோடு தான் ஆரம்பித்தேன் நம் புத்தகத்தைப் பார்த்து ஸ்ரீராம் அவர்கள் சாயி மகராஜ் ஆரம்பித்திருக்கின்றார் நம் புத்தகம் போல் சாயி மகராஜியும் வளர வேண்டும் என்று வாழ்த்தினார்.

உண்மையிலேயே என்னைச் சுற்றி பல சாயி மகராஜ் உடன் வாழ்வதைப் போலவே உணர்கிறேன்.

திரு. இறைநேசர் ஆசிரியர் திரு.அசோக்குமார் அவர்களின் அறிமுகமும் அவர்களின் மூலம் திரு.ஆஞ்சநேயர் விஜயம் ஆசிரியர் திரு.மீனாட்சிசுந்தரம் அவர்கள் அறிமுகமும் ஆலோசனைகளும் கிடைக்கப் பெற்றேன்.


சாயி மகராஜ் குருவைத் தேடி பெயரை பதிவு செய்து அனைத்து உதவிகளையும் செய்து தந்த திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்கும் திரு. அசோக்குமார் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவிக்கின்றேன்.

ஒரு ரூபாய் கூட முதலீடின்றி துவக்கப்பட்ட இப்பத்திரிக்கைப் பணியை பாபாவின் பக்தர்களே முன்னெடுத்துச் செல்வார்கள் என்பதற்கு சில சான்றுகளே இவைகள்.....

மேலும் மேலும் மனதினில் பதிந்தவைகளை மனசாட்சியாய் அடுத்த இதழில் பகிர்வோம்.

ஓம் சாய்ராம்





சரணாகதி

கவலைகளை மறந்து என்னிடம் வந்து உட்கார் என்னையே தியானி, என் மீதே மனதை வை. நடக்கப் போவதை ஒருமித்த மனத்துடன் அமைதியாகப் பார்த்துக் கொண்டிரு வானமே உன் மீது விழுந்தாலும் கவலைப் படாதே, உன்னைக் காப்பாற்ற நான் இருக்கும் போது ஏன் கவலைப் படுகிறாய் நீ கவலைப்படுவதினால் என்னிடம் இருந்து தூரமாகின்றாய். என் மேல் நம்பிக்கை இருந்தால் என்னால் உனக்கு முடியாத காரியம் என்று எதுவும் இருக்க முடியாது என்கிறார் சாயி மகராஜ்.

மாம் ஏகம் சரணம் வ்ரஜ் என்கிறார் பகவான் கண்ணன்.

என்னை சரணடை உன்னை காவந்து செய்கிறேன் என்கிறார்.

சரணாகதியே மகத்தான பிராத்தனை என்கிறார் மகரிஷி ரமணர்.

எல்லாவற்றிற்கும் பகவானே சரணம் என்று தானே கோவில் கோவிலா சுத்தி வேண்டிக் கொண்டிருக்கின்றோம் என்கிறீர்களா?

"வேண்டுதல் இல்லாத வழிபாடே சரணாகதி"

என்கிறார்கள் மகான்கள்

எனக்கு தேவையானதை வேண்டாமல் அது எப்படி வழிபாடு?

அப்படியானால் உமக்கு என்ன தேவை என்பது இறைவனுக்குத் தெரியாதா?

தெரியும்.

அப்போது எதற்கு வேண்டுதல், வழிபாடு போதுமே

என்னய்யா, குழப்பமா இருக்கே...

அய்யா பாஞ்சாலி தன் மானத்திற்கு சோதனை நேர்ந்த போது பகவானிடம் வேண்டுதல் வைத்தாளா, சரணடைந்தாளா?

கிருஷ்ணா அபயம், அபயம் என்றாள்.


ம்..... அதுதானே சரணடைதல், அதை விட்டு விட்டு பாஞ்சாலி. கண்ணா ஐவரும் என்னை வைத்து சூதாடி தோற்று விட்டார்கள். பாவி துச்சாதனன் என் மானத்தை வாங்குகின்றான் என்று நடந்த கதையை கூறிக் கொண்டிருந்தால் அது வேண்டுதல் அல்லவா.

பாஞ்சாலிக்குத் தெரியும் நடப்பதெல்லாம் இறைவனின் ஆணையில்லாது ஏதும் நடக்கா தென்பது. எனவே தான் அவள் காப்பாற்று, காப்பாற்று என்று சரணடைந்தாளே ஒழிய வேண்டுதல்களை வைத்து, இதைச் செய்தால் அதைத் தருகிறேன் என்று ஏதோ வியாபார ஒப்பந்தம் போன்றல்லவா செய்து கொள்கிறோம்.

இறைவன் கருணையினால் தான் காரியம் ஆக வேண்டும் என்றிருக்கும் போது நாம் புலம்பி என்ன ஆகிப் போகின்றது தலையில் சுமையோடு சென்ற ஒருவன் இளைப்பாறுவதற்காக ஒரு சுமைதாங்கியில் ஏறி அமர்ந்தானாம். சுமையை இறக்காமலேயே அது போன்று இருக்கின்றது நம்முடைய செல்.

தாங்குவதற்கு சுமை தாங்கி இருக்கும் போது தேவையில்லாமல் நாம் ஏன் தூக்கித் திரிய வேண்டும்.

"எல்லாம் அவன் செயல், என்னால் ஆவது ஒன்றுமில்லை என்று சரணடை வாழ்க்கை எளிதாகும்.



ஓம் சக்தி

இலவம் பஞ்சு மெத்தை கடை



எங்களிடம் தரமான இலவம்பஞ்சு மெத்தை தலையணை கிடைக்கும்

S.P.பாண்டியன்
Cell.9965490761

26-A, மதகடித் தெரு, கும்பகோணம் 612001.

INSURANCE ADVISOR
(LIFE & GENERAL)

LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA



T.ரவி

Cell: 98657 47523,
99656 35944

E.mail: ravit17568@gmail.com

யுனைடெட் இந்தியா
UNITED INDIA

STAR Health Insurance
Personal & Caring
The Health Insurance Specialist



பிளாட் எண்: 8, துரை நகர், இரண்டாவது விஸ்தரிப்பு,
இதயா காலேஜ் ரோடு, கும்பகோணம் 612001.

அன்பிற்கினிய சாய் சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவைத் தேடி பத்திரிக்கையை படித்து நீங்களும் சாயிசேவை செய்ய விரும்பினாலோ, இப்பத்திரிக்கையின் கருத்துக்கள் உங்களுக்கு பிடித்திருந்து சாயி மகராஜ் தொடர்ந்து வெளிவர விரும்பினாலோ, கீழ்கண்ட முகவரிக்கு உங்கள் தட்சிணையை அனுப்பி வைத்து நீங்களும் சாயி சேவையில் பங்கு பெறாலாம்.

V.ஸ்ரீராம்-ஆசிரியர்

''சாயி மகராஜ் குருவை தேடி''
93/34, K.H.ரோடு, 2வது மாடி,
(SBI பேங்க் எதிரில்) அயனாவரம்,
சென்னை-23.
செல்: 8825831068,9941816692

ஆன் லைன் மூலம் தட்சிணை அனுப்ப:

V.SRIRAM
INDIAN BANK
(PURASAWAKAM BRANG) CHENNAI
A/C NO: 6219480677
IFSC CODE NO: IDB000P056



என்னால் ஆவது ஒன்றுமில்லை

தாமோதர் வளையல் வியாபாரி அகமத் நகரில் வியாபாரம் செய்து வருகிறார். பாபாவின் தீவிர பக்தர் எல்லா செல்வங்களும் இருந்தும், ஒன்றுக்கு இரண்டு மனைவிகள் திருமணம் செய்தும் இதுவரை குழந்தை செல்வம் மட்டும் இல்லை.

போகாத கோவில் இல்லை, பார்க்காத சோதிடர்கள் இல்லை. அனைத்து சோதிடர்களும் தாமோதர்ருக்கு குழந்தை வரம் கிடையாது என்று உறுதிபட தெரிவித்து விட்டனர்.

இருப்பினும் பாபாவின் மேல் கொண்ட தீவிர பக்தியினால் கடைசியாக ஒரு கூடைநிறைய மாம்பழங்களை வாங்கிக் கொண்டு பாபாவை பார்க்கப் புறப்பட்டு விட்டார்.

சீரடி சென்று பாபாவை பணிந்து அவருக்கு காணிக்கை அளித்து மாம்பழங்களையும் சமர்ப்பித்தார். பாபா தாமோதரை கருணையோடு ஆசீர்வதித்து அவர் கொண்டு வந்திருந்த மாம்பழக் கூடையிலிருந்து எட்டு மாம்பழங்களை எடுத்து கொடுத்தார்.

இம்மாம்பழங்களை உன் இண்டாவது மனைவியிடம் கொடு உனக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்றார்.

இருப்பினும் தாமோதருக்கு முழுமையான நம்பிக்கை வரவில்லை. தேவா, என் ஜாதகப்படி எனக்கு குழந்தை வரம் கிடைவே கிடையாது என்று அனைத்து சோதிடர்களும் அடித்துக் கூறிவிட்டனர். நிச்சயிக்கப்பட்ட விதியை படைத்தவனாலேயே மாற்றமுடியாது என்கின்றார்கள் பின் எப்படி பாபா எனக்கு குழந்தை வரம் கிட்டும் என்று கண் கலங்கினார்.

உடனே பாபா, தாமோதரைப் பார்த்து ஒரே ரோஜா செடியில் வெள்ளை ரோஜாவும், சிகப்பு



ரோஜாவும் பூக்குமா என்று கேட்டார்.

பிறகு, நாளை காலை நான் தோட்டத்திற்கு செல்லும் போது என்கூட வா என்றார்.

அடுத்த நாள் பாபாவுடன் தோட்டத்திற்கு வந்தார் தாமு. பாபா, தோட்டத்தில் ஒரே ரோஜா செடியில் வெள்ளை, சிகப்பு, என ரோஜா பூத்திருப்பதைச் சுட்டிக் காட்டினார்.

தாமோதருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை அப்படியே நெடுஞ் சாண் கிடையாக பாபாவின் பாதத்தில் விழுந்தார்.

பாபா கூறினார். தாமோதர் இது என்னால் நிகழவில்லை என் பக்தனின் சந்தேகத்தை தீர்த்து வைக்கும்படி இறைவனிடம் வேண்டினேன். அதனால் இந்த அற்புதம் நடந்தது என்றார்.

இங்கே தான் பாபா இன்றைக்கு உலகம் முழுவதும் கொண்டாடும் நிலைக் குண்டான காரணம் நமக்குப் புரிகின்றது.

பாபா ஒரு போதும் இவ்வகை அதிசயங்களை தான் செய்ததாகக் கூறிக் கொண்டதே இல்லை. ஆண்டவனிடமும் தன் குருவிடமும் தான் கொண்ட பணிவும், பக்தியுமே பாபாவை உலகறியும் மகானாகவும், இன்றி இறைவனாகவும் ஏற்றுக் கொள்ள வைத்திருக்கின்றது.

அதன் பின்பு தாமோதர் தனக்கு கொடுத்த மாம்பழங்களை பத்திரப்படுத்த எண்ணினார். ஆனால் அவர் வைத்திருந்த இடத்தில் நான்கு மாம்பழங்களே இருந்தன எங்கு தேடியும் கிடைக்கவில்லை. பின்பு மீதமிருந்த நான்கு பழங்களை தன் இளைய மனைவியிடம் கொடுத்து உண்ணச் சொன்னார்.

பாபா கூறியதுபோல் தாமோதரனின் மனைவிக்கு அடுத்தடுத்து எட்டு குழந்தைகள் பிறந்தன அதில் நான்கு குழந்தைகள் இறந்துவிட நான்கு பேர் சவுபாக்கியமாக வாழ்ந்தனர்.

பின்னாளில் தான் மாம்பழம் மாயமானதற்கும் பாபாவே காரணம் என்று உணர்ந்த தாமோதர் பாபாவே முழு முதற் கடவுள் என்று உணர்ந்து பணிந்தார்.

புண்ணிய

காசி, ராமேஸ்வரம் இந்துக்களுக்கும், அஜ்மீர், நாகூர், இஸ்லாமியர்களுக்கும், வேளாங்கண்ணி, நாசரேத் கிருத்துவர்களுக்கும் புண்ணிய பூமி...

அதுபோலவே கோதாவரி நதிக்கரையில் பக்கிரி பாபாவின் பாதம்பட்டு உயிர்த்தெழுந்த குக்கிராமம் ஷிர்டி இன்று பாபா பக்தர்களின் புண்ணிய பூமி.

பாபாவின் பாதம் பட்ட சரணாலயத்திற்கு எங்கெங்கோ பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற பல்வேறு சமய மக்கள் இளைப்பாறுதல் வேண்டியும், அமைதி வேண்டியும் சாரை சாரையாக வந்து கொண்டே இருக்கின்றார்கள்.

கோடிக்கணக்கான பக்தர்களை தன்னை நோக்கி ஈர்ப்பதற்கு மனிதசக்திக்களுக்கு அப்பால் அவரிடம் ஏதாவது அமானுஷ்ய சக்தி இருந்ததா? அப்படி இருப்பதாக அவர் கூறிக் கொண்டதுமில்லை. அதற்கான அடையாளங்களையும் அவர் காட்டிக் கொண்டதும் இல்லை. படாபடோபமான ஆஸ்ரமங்களில் பாபா வாழ்ந்து வந்தாரா? இல்லை, பகட்டான ஆடை அணிமணிகளை அணிந்திருந்தாரா?

இல்லை, சிதைந்துபோன ஒரு மசூதிதான் அவருக்கு ஆஸ்ரமம், ஆலயம் எல்லாம், தலையில் கட்டுவதற்கு ஓர் கிழிந்த துண்டு, தொடையை மறைக்க





ஷிர்டி

கந்தல்
வேட்டி, அதற்கு
மேல் அழுக்கை சுமக்க ஓர் அங்கி.

பாபா வேள்வியின் நாயகனாக வாழ்ந்தது இல்லை. அவர் யார்? பூர்வீகம் என்ன? தாய் தந்தை யார் அவர் பெயர் என்ன? என்ற கேள்வியின் நாயகனாகவே வாழ்ந்தார்.

தலைக்கு வைத்துப் படுக்க ஒரு செங்கல், விரித்து உடலை கிடத்த ஒரு சாக்கு, இவைதான் அவரின் சொத்து கடைசிவரை இவைகளை இவர் கைவிடவே இல்லை. திருவோடு ஏந்தி தினசரி வீடுகளில் யாசகம் பெற்றே உண்டார்.

பாபாவிற்கு வேதம் உபநிடதம் சாஸ்திரங்கள் புராண, இதிகாசங்கள் தெரியுமா, தெரியாது, ஏன் பாபாவிற்கு எழுத படிக்கவே தெரியாது.

ஆயினும் பாபாவிற்கு இவை அனைத்தையும் உள்ளடக்கிய ஒரே மந்திரம் நன்றாகத் தெரியும், அது 'இறைவன் உயர்ந்தவன்' என்பதே.

அவருடைய பக்தர்களின் சேனை உலகெங்கும் பல்கி பெருகி வியாபித்திருக்கின்றது. சாயி எங்களோடு வாழும் தெய்வம் என்று உரிமை கொண்டாடுகிறார்கள். மன உளைச்சலில் மூழ்கிய உள்ளத்திற்கு பாபா உற்சாகம் தருகிறார். ஓய்ந்து போய் இடறுகின்ற கால்களுக்கு உரமேற்றி உற்சாகமாய் நடைபோட புதிய பாதையை காட்டுகின்ற புண்ணிய பூமியாய் ஷிர்டி விளங்கின்றது.


பாபாவை தேடுவதை பாபாவாக

நான் பிறந்ததில் இருந்தே பாபா பக்தை. எங்கள் வீட்டில் எல்லோருக்குமே தெரிந்த ஒரே மந்திரம் சாய்ராம். எங்கள் வாழ்க்கையே பாபாவால் தான் நகர்ந்து கொண்டிருக்கிறது. கடந்த 20 வருடமாக எங்கள் வீட்டிலேயே பாபா பூஜை செய்து வருகின்றோம். வாரம் தோறும் அக்கம்பக்கத்தில் இருந்து எல்லாம் 40, 50 பக்தர்கள் கூடிவிடுவார்கள். பஜனை, அர்ச்சனை, அன்னதானம் என்று களைகட்டும். வருகின்ற பக்தர்களுடைய பிரட்சனைகளுக் கெல்லாம் பாபாவிடம் கேட்டு தீர்வு சொல்கிறேன்! ஆனால்... என்று நிறுத்தினார் அந்தச் சகோதரி,

சொல்லுங்கள்... என்றேன்,

ஆனால் என்னுடைய பிரட்சனைகளுக்கு மட்டும் சாயி தீர்வே காட்ட மாட்டேன் என்கிறார் என்றாள் அவள், எனக்கு சிரிப்புத்தான் வந்தது, பிறகு கூறினேன். உங்கள் சிக்கல் எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும் உங்களிடம் வருகின்றவர்களின் பிரட்சனை தீர்வதற்கு வழிசொல்கின்ற இடத்தில் பாபா உங்களை வைத்திருக்கின்றாரே, அதை சற்று யோசித்தீர்களா, இதைவிட பாபா உங்களுக்கு என்ன செய்ய முடியும். மேலும் சற்று ஆழமாக சிந்தித்தீர்களேயானால் நீங்கள் மற்றவர்களுக்குச் சொல்லும் பதிலே உங்கள் பிரட்சனைக்கும் கூட பதிலாக இருக்கலாம். அடுத்தவருக்கு சேவை செய்வதை சற்று ஆணவமாக எடுத்துக் கொண்டதனால் கூட அது உங்களுக்கு புரியாமல் இருக்கலாம். அதனால் உங்கள் சொந்த பிரட்சனைக்கு பாபா தனியாக தீர்வு சொல்ல வேண்டும் என்று நீங்கள் எதிர் பார்க்கலாம் அல்லவா, தவறில்லை. கோபப்படாமல் சற்று சிந்தித்துப் பாருங்கள்.

அடுத்தவர்களுக்கு சேவை செய்யும் அந்த இடத்தில் உங்களுக்குப் பதில் வேறு யாரையாவது பாபா நியமித்திருக்கலாம் அல்லவா, உங்களுக்கல்லவா அந்த இடத்தை சாயி கொடுத்திருக்கின்றார். அப்படியானால் அவர்களை விட உம்மிடம் வேறு ஏதோ ஒரு



விசேஷம் இருக்க வேண்டும் தானே, அது என்ன வென்று உங்களுக்கு புரியவில்லை. அதுதான் உங்கள் பிரட்சனையே தவிர, நீங்கள் பிரட்சனை என்று கூறுபவை எல்லாம் ஒரு பிரட்சனையே இல்லை.

இவ்வுலகினில் மனிதர்களுக்கு ஏற்படும் அத்தனை பிரட்சனைகளும் முதலில் உடல் சார்ந்த பிரட்சனைகளாகத்தான் புறப்படும். தயவு செய்து உங்கள் உடல் சார்ந்த பிரட்சனைகளை நினைப்பதை விட்டுவிட்டு மனம் சார்ந்த மெய்ஞானத்தை தேடுங்கள்.

சற்று சிந்தியுங்கள், மனிதர்களாகிய நாம் அனைவருமே நம் உடல் சார்ந்த தேவைகளுக்காகத் தான் இறைவனை தேடுகிறோம். வாழ்வினில் என்றாவது மனம் சார்ந்த



விடுங்கள் மாறிக் கொள்ளுங்கள்

மெய்ஞானத்தை
உணர்வதற்கு இறைவனை
தேடி இருக்கின்றோமா? என்றேன்.

அதற்கு அந்த சகோதரி ஆதியில் இருந்த ஆஸ்ரம தர்மத்தில் இருந்து பலநூறு ஆண்டுகள் கடந்து, மனம், உடல் என்று பிரித்து பார்க்க முடியாத அளவிற்கு நவீனத்தில் ஊறிப்போய் விட்டோம்., நீங்கள் கூறுவது ஏதோ புரிவது போல் இருந்தாலும் அதில் இருந்து எங்களால் விலக முடியவில்லை. எனவே உடல், மனம், விஞ்ஞானம், மெய்ஞானம், ஆத்மா, பரமாத்மா, எல்லாம் விட்டு விட்டு எளிமையாக புரியும்படி
கூறவும் என்று
உரிமையோடு அன்புக்
கட்டளையிட்டாள் சகோதரி.

அப்படியானால் கடவுளை கண்டு பிடிக்க இயலாது என்பது உங்கள் என்னமா என்றேன்.

ஏறக்குறைய அப்படித்தான். எங்களைச் சுற்றியுள்ள பல மார்க்கங்கள் எங்களுக்கு மதத்தைப் பற்றித் தான்

கற்பிக்கின்றதே தவிர ஆன்மீகத்தை கற்பிக்க வில்லையே.

மிகச் சரி, மதம் என்பது நமது உடல். ஆன்மா என்பதே ஆன்மீகம். இங்கிருக்கும் அனைத்து மதங்களும் தன் மதம் என்னும் அடையாளத்தை உதறிவிட்டு எப்போது மார்க்கம் என்னும் தூய வழி நடக்கின்றனவோ, அப்போது தான் அது மனிதர்களுக்கு மனிதாபிமானத்தை போதித்து ஆன்மாவை விழிப்படையச் செய்ய முடியும். ஆன்மா விழித்தால் தான் பரமாத்மாவை அடைய முடியும்.

இதைச் செய்ய மதங்கள் என்று முன்வருகிறதோ அன்றுதான் அது மார்க்கமாக மாறும் என்பதில் சந்தேகமில்லை.

ஆயினும் இக்கருத்தை உலகிற்கு உணர்த்த ஒரு நூற்றாண்டுகளுக்கு முன்பே வாழ்ந்து காட்டியவர் நம் சற்குரு நாதர் சாயி மகராஜ் அவர் பக்தையாய் இருந்தும் அவரை நீங்கள் உணராததற்கு நான் சற்று வருத்தப் படுகின்றேன்.

பரவாயில்லை இவ்வளவு பிரட்சனைகளையும் தாண்டி ஒரே நொடியில் நீங்கள் அனைத்தையும் கடந்து நல்ல ஆத்மாவாக மாற வேண்டுமா! இதை மட்டும் செய்யுங்கள்.

இனி உங்கள் பிரட்சனை எதுவாயினும், வெற்றி, தோல்வி, இன்பம், துன்பம், அன்பு, நட்பு, பெருமை, பொறாமை, அகங்காரம், ஆசை எது. உம்மை நோக்கி வந்தாலும் அந்த நிமிடம் பாபாவை தேடி ஓடாதீர்கள். தேடி ஒடுவதற்கு அவர் என்ன ஒரு சில இடங்களில் மட்டுமா இருக்கின்றார். சாயி இல்லாத இடம் ஏது. பின் ஏன் அவரை தேட வேண்டும், தேடத்தான் வேண்டும், ஆனால் எங்கு என்பது தானே கேள்வி.

சற்றே சிந்தியுங்கள் நமக்கு வந்திருக்கும் பிரட்சனைகள் பாபாவிற்கு வந்திருந்தால் அவர் எப்படி அதை எதிர் கொண்டிருப்பார் என்று யோசியுங்கள் உலகெங்கும் வியாபித்துக் கொண்டிருக்கும் இறைவன் உமக்குள்ளும் இருப்பார் தாமே. அந்த பிரட்சனை உடனே சுமூகமாய் முடிந்து விடும்.

உண்மை. இறைவனை தேடுவதை விட இறைவனாக மாறிக் கொள்வது மிக எளிது என்றேன்.

சகோதரி நிதானமாக புன்னகைத்தாள்.

விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே....

உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.

முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.4000

சாய் ராஜ யோகா

இயற்கை நலவாழ்வு மையம்

யோகா, பிராணாயாமம், தியானம், யோகா தெரபி



உடலும் உள்ளமும் ஆரோக்கியத்துடன் ஆனந்தமாய் வாழ அனைவருக்கும் எளிய மூச்சுப் பயிற்சி, ஆசனப் பயிற்சி, தியானப் பயிற்சி,குண்டலினி யோகி ஸ்ரீராம சாது அவர்களின்

குறுகிய கால பயிற்சி வகுப்புகள்

சாய் ராஜ யோகாவின் ஆனந்த கிரியா 1 நாள் பயிற்சி

(வயிறு சம்பந்தப்பட்ட பிரட்சனைகள், கொழுப்புக் கட்டி, நீர்க்கட்டி, மாதவிடாய், குழந்தையின்மை, செரியாமை, சுறுசுறுப்பின்மை, மலச்சிக்கல், சளி தொந்தரவு, ஆஸ்துமா, வீசிங், மனசோர்வு, மூட்டுவலி, உடல்வலி ஞாபகமறதி நீங்கும் அற்புதப் பயிற்சி)

எளிய முறை யோக ஆசனப் பயிற்சி 2 நாள் பயிற்சி

(நீரிழிவு, முதுவலி, உடல் பருமன், இதயநோய், ஒற்றை தலைவலி, ஆண்மைக்குறைவு, தூக்கமின்மை, மன அழுத்தம், ரத்த அழுத்தம், கண் நோய் தீர ஆசனப் பயிற்சி)

தன்னை உணர குண்டலினி யோக தியானம் 8 நாள் பயிற்சி

(வாழ்க்கை வளத்தை, உடல் நலத்தை சரி செய்யும் யோகசக்கரங்கள், குண்டலியின் இருப்பு, ஏறுபடி, இறங்குபடி, குண்டலினி யோகத்தின் மூலம் ஆத்மஞானம், பிரம்ம ஞானம் அடைவது இல்லற இன்பங்களை குறைவின்றி அனுபிவித்து இறையுணர்வோடு வாழ்தலைப் பற்றி ஞானம்)

மாதம் தோறும் முதல் ஞாயிற்றுக்கிழமை மௌனம், பயிற்சி நிகழும், அனைத்துப் பயிற்சிகளுக்கும், கட்டணங்களுக்கும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விபரம் அறியவும்

93/34, K.H.Road, 2nd Floor, Opp SBI Bank, Ayyanavaram, Chennai-23

9941816692, 8825831068



குருவைத் தேடி...

பொய்ம் மதங்கள் போதனை செய் பொய் குருக்களைப்
புத்தீ சொல்லி நன்னெறியில் போக விடுக்கும்
மெய் மதந்தான் இன்னதென்று மேவ விளம்பும்
மெய் குருவின் பதம் போற்றி ஆடு பாம்பே!

- பாம்பாட்டிச் சித்தர்.

குருவிலே இருவகை உண்டு, நியதகுரு, அநியத குரு, இறைவனால் நியமிக்கப்பட்டவர் நியத குரு, இறைவனால் நியமிக்கப்படாதவர் அநியத குரு.

நற்புண்புகளை ஊட்டி மனதை தூய்மையாக்கி சீடனை மோட்ச மார்க்கத்தில் வழிநடத்தி சீடனை சீடனாக மட்டுமே வளர்ப்பவர் அநியத குரு.

நான் வேறு, கடவுள் வேறு, என்ற துவைத பாவத்தை அழித்து, நானும் கடவுளும் ஒருவரே என்ற அத்வைத பாவமாகிய "தத்துமஸி" எனும் மகா வாக்கியத்தின் பொருளை நேரிடையாக உள்ளுக்குள்ளே மலரச் செய்து சீடனை பரம்பொருளை நோக்கி அழைத்துச் செல்பவரே நியத குரு – அவரே சற்குரு.

யானை சேனை தேர்பரி யாவும் அணியாய்
யமன் வரும்போது துணையாமோ அறிவாய்
ஞானஞ் சற்றும் இல்லாத நாய்கட் குப்புத்தீ
நாடி வரும்படி நீ நின்று ஆடு பாம்பே

என்றெல்லாம் இவ்வுலக வாழ்க்கையின் நிலையாமையைப் பற்றி எடுத்துச் சொல்லி நம்மை நல்வழிப்படுத்திய அநேக மெய் குருமார்கள் காலம் தோறும் தோன்றி மனித குலத்திற்கு நல்வழி காட்டி அருளி இருக்கின்றார்கள்.

இன்றும் அநேக நற்குருமார்கள் இருக்கின்றார்கள். நாம் தேடினோமா என்பதுதான் கேள்வி.

பணத்தைத் தேடவே நேரம் போதவில்லை. இதில் குருவை எங்கே தேடுவது என்கின்றீர்களா, உண்மைதான் பணம் தேடுகின்ற மனம் நற்குருவை நிச்சயமாய் தேடாது தான்.

ஆயினும் ''இரைதேடும் போது

இறையையும் தேடு'' என்று மகான்கள் சொல்லி வைத்திருக்கின்றார்கள். எனவே நற்குருவை நாம் தான் தேடிப் போக வேண்டும் நம்மை தேடி வரமாட்டார். குருவருள் இன்றி திருவருள் இல்லை குருவின் பெருமைகளைச் சொல்ல எங்களிடம் ஆயிரம் போதனைகள் உண்டு. ஆனால் எங்களுக்கும் நேரம் இல்லை.

அப்படியானால், என்னதான் செய்வது, நாம் தெரிந்தோ, தெரியாமலோ, முன்வினைப் பயனோ, பின்வினைப் பயனோ நற்குருவில் சற்குருவான சாயி பாபாவை பிடித்திருக்கிறோம்.

பிடித்தவர்கள் அனைவரும் நாம் கிடைத்ததற்கறிய புளியம் கொம்பை பிடித்திருக்கின்றோம் என்பதை அறிகின்றார்களா அறிந்தால் போதும், அய்யம் இல்லை.

இப்பூவுலகினில் இவரைவிட நற்குரு எங்கு கிடைப்பார் கிடைத்ததை கைநழுவ விடுவது மூடத்தனமன்றோ சற்குரு சாயி மகராஜ் என்பது ஏட்டுக் கல்வி அன்று, நடைமுறை அனுபவம், சாயி பாபா யாருக்கும் உபதேசம் அருளியதில்லை அவர் உபதேசமாகவே வாழ்ந்தார்.

இவ்வுலகு உய்ய வேண்டுமாயின் ஒவ்வொரு சாயி பக்தனும் சாயின் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒவ்வொரு நிகழ்வையும் பாராயணம் செய்யுங்கள் இவ்வுலகு நற்கதி அடையும். நாமும் மனிதப் பிறவியின் பயனை அடைவோம்.

பாபா உத்தவேச புவா என்பவரிடம், எனக்கு 11 ரூபாய் தட்சிணை கொடு என்கிறார்.

புவா சமயோசிதமாக, நான் எனது 10 இந்திரியங்களையும்



மனதினையும் சேர்த்து 11 ரூபாய் தட்சிணையாக சமர்ப்பிக்கின்றேன் என்றார்.

அதற்கு பாபா கூறுகிறார், அவைகளை அளிக்க நீ யார் ஏற்கனவே அவை என்னுடையவை. நான் கேட்டது உன் நற்சிந்தனையும், நற்செயல்களையும் ஆகும் என்றார். தொடர்ந்து புராணம் வாசி, ஏதாவது பாராயணம் செய் என்றார்.

புவா எந்த புராணம் என்று கேட்டார்.

எதில் நான் உன்னிடம் பேசியுள்ளேனோ, எதில் நான் இன்றும் உன்னுடன் பேசுகிறேனோ அவைகளை மீண்டும் மீண்டும் நினைவிற் கொண்டுவந்து பாராயணம் செய் என்றார்.

குருவை வணங்குவது என்பது ஒருமுறை, அவரை பின்பற்றுவது என்பது நடைமுறை அல்லவா, நாம் நம் சற்குருவை பின்பற்றுகிறோமா, அப்படியானால் நாம் குருவை தேட தொடங்கி விட்டோம் என்று அர்த்தம்.

தினம் தினம் வகை வகையாய் பட்சணங்களும், உணவு வகைகளும், பாலும் பழங்களும் பாபாவின் காலடியில் பரப்பி பாபா

யாருடைய நிவேதனத்தை சுவைப்பார் என்று மக்கள் அனைவரும் காத்துக் கொண்டிருக்க, அத்தனையும் தன் புறக்கையால் ஒதுக்கி விட்டு தன் பழைய தகர டப்பாவை எடுத்துக் கொண்டு தினமும் 5 வீடுகளில் யாசகம் செய்து அந்த உணவையே பெரிதும் விரும்பி உண்டவரே நம் சற்குரு சாயி மகராஜ் அல்லவா.

ஆசை என்ற அகப்பையில் மாட்டிக் கொண்டிருக்கின்ற குரங்காகிய மனதை உடைய நம்மால் இதைப் பின்பற்ற முடியுமா?

ஒரு காலும் முடியாது, சரி பரவாயில்லை, அன்னதானம் வாங்கி அருந்துகின்றோமே! அதுகூட பகவான் நமக்கிடும் பிச்சைதான் என்ற பணிவு நம்மிடம் இருக்கின்றதா, இந்த ஓட்டை சட்டைக்குள் உயிர் தங்க வேண்டி இறைவன் இடும் பிரசாதத்திலேயும் குறை குற்றம்.

இனியாவது சற்குருவை பின்பற்று வோமா,

கண் அசைத்தால் தங்க, வைர அணிகலன்களும், பட்டாடைகளும் கொண்டு வந்து குவிக்க ஆயிரமாயிரம் பேர் அணிவகுத்து நிற்க தயாராய் இருந்தும், கிழியும் வரை ஓரே ஆடையை அணிந்து திரிந்தாரே, இவரை குருவென அடைந்த நாம் என்ன செய்கிறோம்.

7 வருடங்களுக்கு முன்பு எடுத்த பழைய ஆடையை கூட தலை தீபாவளிக்கு எடுத்தது என்று இன்னமும் பீரோவில் வைத்து அழகு பார்க்கின்றோம். தேவையை குறைத்தால் தெய்வத் தன்மை வளரும் என்பார்கள். தேவைகளே இல்லாது வாழ்ந்தவர் நம் சற்குரு சாயி மகராஜ்.

நடக்க இயலாத கடைசி காலத்தில், அவரை அமர்த்தி நகர் வலம் வர மெய்யன்பர்கள் பல்லக்கும், சக்கர நாற்காலியும் கொடுத்தும் அதை ஒரு பொழுதும் உபயோகப்படுத்தாது, தன் உடல் அழியும் இறுதிக் காலம் வரை தன் அடியார்களின் உதவியோடு தத்தி தத்தி நடை பழகினாரே... அவரின் பாதம் பட்ட அந்த புனித பூமி சீரடியிலேயே தரிசனம் முடித்து பிரசாதாலயா சென்று வர இலவச பேருந்தை எதிர் நோக்கி காத்திருக்கிறோம்.


இப்படி நம் காலத்திலேயே வாழ்ந்த நம் சற்குரு நாம் எப்படி வாழ வேண்டும் என்று என்பது ஆண்டுகள் முன் மாதிரியாக வாழ்ந்து விட்டு சென்றிருக்கிறார்.

ஆனால் நாம் இவைகளை எல்லாம் கண்டும் கேட்டும் படித்தும் உடல் புல்லரித்து கண்கள் நீரை பணித்து என்ன ஒரு மிராக்கிள் என்று கூடிப் பேசி பெருமை பேசி களைக்கின்றோம்.

நல்ல குருவை தேடுவதென்று முடிவு செய்து தேடிவிட்டோம். முடிந்த அளவிற்கு சாயி மகானின் வாழ்வை நம் கண்முன் கொண்டு வந்து பாராயணம் செய்து அவரை இன்பத்திலும், துன்பத்திலும் இரவினிலும், பகலினிலும், விழித்திருக்கும் நேரத்தில் எல்லாம் பின்பற்றி பார்ப்போமே.

குருவை பின்பற்றி வாழ்வதே
குருவை அடைந்ததற்கு அர்த்தமாகும்

(தேடுவோம்)



100% இயற்கையாக தயாரிக்கப்பட்ட சாய் ராஜயோகாவின் தயாரிப்புகள்

- ஆறுவகை பூக்களால் தயாரிக்கப்பட்ட ஹெர்பல் டீ
- 25 மூலிகைகளுடன் ஹேர் ஆயில்
- சீயக்காய் ஹேர் வாஷ் பவுடர்
- வேலம்பட்டை பற்பொடி
- வயிற்று நோய் தீர்க்கும் சுண்டவற்றல் பொடி
- அனைத்து நோய்களுக்கும் அமிர்த சூரணம்
- தோல் நோய் தீர்க்கும் குப்பைமேனி தைலம்
- 12 மூலிகைகளுடன் நிலவேம்பு குடிநீர்
- ஷிஸீஷீஷ் சூப்பர்வாஷ் டிட்டெர்ஜெண்ட் லிக்விட்

மொத்தமாகவும், சில்லரையாகவும் வாங்க தொடர்பு கொள்ளவும்

சாய் ராஜயோகா இயற்கை நலவாழ்வு மையம்

93/34, K.H.Road, 2nd Floor, Opp SBI Bank, Ayyanavaram, Chennai-23

9941816692, 8825831068

நன்றி! நன்றி!! நன்றி!!!

ஷிர்டி சாய் பாபாவின் திருவருளால் வெளிவரும் ''சாயிமகராஜ் குருவை தேடி'' ஆன்மீக மாத இதழ் உருவாக காரணமான சாய் சொந்தங்கள் அனைவருக்கும், பாபாவைப் பற்றிய குறிப்புகளை அறிய உதவிய அனைத்து புத்தக ஆசிரியர்களுக்கும் எனக்கு முன்னே சேவை செய்து கொண்டிருக்கும் எனது முன்னோடிகளுக்கும் பாபாவின் பக்தர்கள் அனைவருக்கும் அவர்களின் பொற்பாதங்களை தொட்டு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

– ஆசிரியர்

பக்த



2005ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஓர் நாள் அதிகாலை எனக்கு ஓர் கனவு வந்தது. அதில் நானும் என் கணவரும் ஓர் அடர்ந்த காட்டிற்குள் செல்கிறோம். அங்கே ஒரு வேப்ப மரத்தின் அடியில் தலையை ஒரு துண்டு துணியால் மூடியபடி, நீள அங்கி அணிந்த வயதான மகான் போன்ற ஒருவர் அமர்ந்திருக்க நாங்கள் அவரை விழுந்து வணங்க, அவர் எங்களை ஆசீர்வதிக்கின்றார். அத்துடன் கனவு முடிந்துவிட்டது. ஆனால் அவரின் முகத்தை என்னால் மறக்க முடியவில்லை. கருணையான அந்த முகம் எப்போதும் என் மனக் கண்முன் ஒளிப்பிழம்பாய் நிழலாடிக் கொண்டே இருந்தது.

தலையில் வெள்ளைத் துணியால் சுற்றி கொண்டை போடுவது போல் தொங்க விட்டிருந்தார். முகத்தில் வெண்மையான தாடி, வெள்ளை நிறத்தில் நீள அங்கி ஒரு தோள்பட்டையில் ஜோல்னா பை போல் ஒன்று தொங்கிக் கொண்டிருக்க, ஒரு கல்லின் மீது அமர்ந்து ஒரு காலின் மேல் இன்னொரு காலை போட்டபடி அமர்ந்திருந்தார்.

வெளியில் சென்றிருந்த என் கணவர் வந்ததும் முதல் வேளையாய் என் கனவை விவரிக்கத் தொடங்கினேன். என் கணவர் கனவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கமாட்டார். இருப்பினும் நான் சங்கடப்படக்கூடாது என்பதற்காக கேட்டார். பிறகு நான் கூறிய உருவ ஒற்றுமை வடமாநிலத்தில் இருக்கும் மகான் சாயிபாபாவை ஒத்திருப்பதாகவும், அதற்குமேல் அவரைப் பற்றி தனக்கு வேறு ஏதும் தெரியாது என்றும் கூறிவிட்டார். நானும் அதை அப்படியே விட்டு விட்டேன்.

ஒரு வாரம் சென்று எனது கணவரின் நண்பர் திரு.பாண்டியன் என்பவர் தான்

லீலாமிர்தம்

அவசரமாக ஊறுக்குச் செல்வதால் நூலகத்தில் எடுத்த புத்தகத்தை மாற்றி வைக்க முடியாததால், நீங்கள் போகும் போது மாற்றி வையுங்க என்று ஒரு புத்தகத்தை ஒரு கவரில் போட்டு என் கணவரிடம் கொடுத்து விட்டுச் சென்றார். வெளியில் புறப்பட்ட என் கணவர் அதை மறந்து விட்டுச் சென்று விட்டார்.

எனக்கு பொழுது போகாததால் அது என்ன புத்தகமாக இருக்கும் என்ற ஆவலில் கவரைப் பிரித்துப் பார்த்த நான் வியப்பின் உச்சிக்கே சென்று விட்டேன். நான் கனவில் கண்ட அதே கருணாமூர்த்தியின் உருவத்தை புத்தகத்தின் அட்டையில் பதிப்பித்து ஷிர்டி சாய்பாபா வரலாறு என்றிருந்தது.

நான் முன்பின் பார்த்திராத ஒரு மகான் என் கனவில் வந்ததும் பிறகு புத்தக வடிவில் எங்கள் இல்லம் தேடி வந்து காட்சி தந்ததும், என்னால் நம்ப முடியவில்லை. பாபாவையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன்.

எங்கள் வாழ்க்கையில் பாபா முதலில், கலங்காதே! நான் இருக்கிறேன் என்ற செய்தி அனுப்பியது இப்படித்தான்.

அடுத்து நேரில் வந்தது எப்படி என்று பாருங்கள்.

நாங்கள் குடியிருந்த வீட்டின் எதிரில் ஓர் திருமண மண்டபம் இருந்தது. விசேஷம் இல்லாத நாட்களில் எங்கள் தெருவில் இருக்கும் குழந்தைகள் அனைவரும் அங்கே தான் விளையாடுவார்கள். எங்களது குழந்தை அமிர்தாவிற்கு அப்போது 1 வயது மண்டபத்து காவல் காரத் தாத்தா குழந்தைகளோடு அன்பாக விளையாடுவார்.

சமீபத்தில் புட்டபர்த்தி சாய்பாபாவின் பிறந்த நாள் நிகழ்ச்சி மிக கோலாகலமாக நடந்து முடிந்து மண்டபத்தை காலி செய்து போகும் போது சில பிரசாத பைகளை அங்கேயே விட்டுச் சென்றிருக்கின்றனர்.

குழந்தைகள் விளையாடி முடித்து வீடு திரும்பும் போது காவல் காரத் தாத்தா பிரசாத பைகளை ஆளுக்கு ஒன்றாக கொடுத்து அனுப்பியிருக்கின்றார்.

எங்கள் குழந்தை அமிர்தா பிரசாத பையை தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்து தாத்தா, தாத்தா என்றாள்.

நான் பையை வாங்கிப் பிரித்துப் பார்த்தேன். அதில் ஓர் லட்டும், புட்டபர்த்தி பாபாவின் புத்தகம் ஒன்றும் சிறிய மெழுகுவர்த்தி பெட்டி

ஒன்றும் இருந்தது. பிரசாதத்தை நானும் குழந்தையும் சாப்பிட்டுவிட்டு மெழுகுவர்த்திப் பெட்டியை அலமாரியில் வைத்துவிட்டேன்.

குழந்தையின் உணவிற்குக் கூட கையில் காசில்லாத நேரம் அது. அடுத்தவாரம் கார்த்திகை தீபம் என் கணவருக்கோ கார்த்திகை தீபம் ஏற்றி வழிபடுவது என்றால் மிகவும் பிடிக்கும் ஆனால் தீபம் ஏற்றுவதற்கு கூட பணமில்லை மனம் வருந்தியவளாய் கணவரின் வருகைக்காக காத்திருந்தேன் கணவரோ வாடிய முகத்துடன் வீடு திரும்பினார்.

என்ன நிலை இது விளக்கும் எண்ணையும் கூட வாங்க முடியவில்லையே என்று நொந்து கொண்ட போது தான் போன வாரம் எங்கள் மகள் எடுத்து வந்த மெழுகுவர்த்தி பொட்டி ஞாபகத்திற்கு வந்தது அதை என் கணவரிடம் கொடுத்து இந்த மெழுகுவர்த்தியை ஏற்றி வையுங்கள் என்றேன்.

பெட்டியை வாங்கி பிரித்த என் கணவரின் முகம் மேலும் வாடியது.



என்னங்க என்பது போல் அவரைப் பார்த்தேன். இதுல மெழுகுவர்த்தி இல்லை ஏதோ ஒரு பொம்மை இருக்கு என்று வெளியே எடுத்து அதை பார்க்காமல் கூட என் கையில் திணித்து விட்டார். என் கணவர் சிலை வழிபாடு செய்யும் வழக்கமில்லாதவர். அவருக்கு எல்லாமே அருட்பெரும் ஜோதி, தனிப் பெருங்கருணைதாம்.

நான் என் கையில் இருக்கும் சிலையைப் பார்த்தேன் எங்கள் வறுமை, துக்கம் எல்லாம் எங்களை விட்டு ஓடியது போல் இருந்தது. உற்சாக மிகுதியால், என்னங்க என்று கூச்சலிட்டேன். என் கணவர் ஓடிவந்தார் இத பாருங்க, கனவில வந்து பிறகு புத்தகத்தில் வந்து, இப்போது சிலை வடிவில் நேரிலேயே வந்து விட்டார் என்று ஆனந்த கூத்தாடினேன்.

அந்த வருடம் கார்த்திகை தீபத்தன்று எங்கள் வீட்டில் விளக்கு ஏற்றவே இல்லை. ஆனால் எங்கள் வீடும் எங்கள் மனதும் பிரகாசமாக இருந்தது.

காரணம் எங்களை உய்விக்க சற்குரு சாயி பாபா எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டார்.

சூரியனின் சாம்ராஜ்யத்தில் அகல் விளக்கு எதற்கு என்ற சத்சரித வரிகளே இப்போது எனக்கு ஞாபகம் வருகிறது.

ஆனால் என் கணவருக்கு மட்டும் ஓர் சந்தேகம் இது பாபாவை விளம்பரப்படுத்தும் உத்திபோலும் என்று என்னிடம் வாதிட்டார்.

உடனே நான் பிரசாதபை வாங்கிய மற்ற குழந்தைகளின் வீட்டிற்கே சென்று பார்த்ததில் அவை அனைத்திலும் மெழுகுவர்த்திகளே

இருந்தன. அப்படியே ஷிர்டி பாபாவை விளம்பரப்படுத்தும் உத்தி இது என்றால் அதை ஏன் புட்டபார்த்தி பாபாவின் பிரசாத பையில் வைத்து கொடுக்க வேண்டும். அதற்கு பதில் சத்திய சாய் பாபாவின் சிலையை அல்லவா வைப்பார்கள் என்றேன் என் கணவரும் யோசிக்க ஆரம்பித்தார்.

எங்கள் வாழ்க்கையை பாபா தன் கையில் எடுத்துக் கொண்டார் என்பதை நாங்கள் பிற்பாடு உணர்ந்து கொண்டோம்.

ஒரு முறை என் பிறந்தநாள் என்று மயிலை பாபா கோவிலுக்கு நானும் என் கணவரும் குழந்தைகளும் சென்றிருந்தோம். அன்று என்னவோ, எனக்கு இன்று பாபாவை நேரில் பார்க்க வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. உடனே அதை என் கணவரிடம் கூறினேன் அன்று வியாழக்கிழமை வேறு ஏக கூட்டம் வரிசையில் நின்றிருந்த என் கணவர், நம்பிக்கையோடு மனதிற்குள் பிராத்தனை செய், கண்டிப்பாக பார்க்கலாம் என்றார். நானும் மனதிற்குள் பிரார்த்தனை செய்தேன்.

ஐந்து நிமிடம் தான் இருக்கும். எங்களின் முன் வரிசையில் சென்று கொண்டிருந்த 18 வயதுடைய ஓர் இளம் பெண் பார்ப்பதற்கு சற்று மனநிலை சரியில்லாதவள் போல் தென்பட்டாள். சட்டென்று வரிசையில் இருந்து விலகி ஓடி வந்து என் கணவரின் கைகளை இறுக்கிப் பிடித்தபடி வாங்க பாபா, வாங்க, இப்பத்தான் வர்றீங்களா, என்று பழகிய பெண்ணைப் போல் என் கணவரிடம் பேசினாள். அவரும் ஆமாப்பா இப்பத்தான் வந்தேன் என்று அன்பாகப் பேசினார். சரி, தெரிந்த பெண்ணாகத் தான் இருக்கும் என்று அந்தப் பெண்ணைப் பார்த்தேன். அவளும் என் கணவரின் கைகளை விடாமல் திரும்பி என்னைப் பார்த்தாள். ஒரு விநாடியில் அந்தப் பெண்ணின் முகம் மறைந்து அதில் எங்கள் குல தெய்வம் சாயி பாபாவின் முகத்தை கண்டேன். என்ன ஒரு தரிசனம், என் உடல் புல்லரித்து. நான் ஒரு சாதாரண பக்தை, இன்னும் கூட உன்னை நான் சரியாக புரிந்து கொள்ளவில்லை. நான் ஆசைப்பட்டேன் என்பதற்காக உடனடியாக உன் தரிசனத்தை தந்தாயே! என் மனம் ஆனந்தக் கூத்தாடியது.

அந்தப் பெண் எங்களை அன்போடு பார்த்து வர்றேன், வர்றேன், என்று கூறிக் கொண்டே அவளின் அம்மாவிடம் சென்று விட்டாள். நான் சுதாரித்துக் கொண்டு என் கணவரைப் பார்க்க அவரும் திக்பிரமை பிடித்தது போல் நின்றிருந்தார்.

என்னங்க அந்தப் பெண் உங்களுக்கு தெரிந்த பெண்ணா என்றேன், அதற்கு என் கணவர், இல்லப்பா ஆனால், அந்தப் பெண்ணின் முகத்தில் ஒரு கணம் நான் பாபாவைப் பார்த்தேன் என்றார். என்ன ஆச்சரியம் நான் பார்த்த அதே காட்சியை என் கணவரும் கண்டிருக்கின்றார்.

அதற்குப் பின்பு கடந்த 13 வருடங்களில் நாங்கள் அடைந்திருக்கும் ஒவ்வொரு ஆன்மீக, லௌகீக முன்னேற்றத்திற்கும் சற்குரு சாயி நாதரே காரணம் நாங்கள் வாழும் வொவ்வொரு நொடியும் சாய்நாதரின் கருணையே என்பதை உணர்ந்து ஒவ்வொரு நொடியும் நன்றியினை காணிக்கையாக்குகிறோம்.

ஓம் சாய்ராம்

திருவள்ளூர், வேடாங்கி கிராமம், ஊத்துக் கோட்டை சாலையில் அமைந்திருக்கும் மிகப்பிரமாண்டமான பாபா ஆலயத்தை பார்க்கும் போதே மனம் ஆனந்தமாக இருந்தது. பிரதான சாலையில் இருந்து உள்ளே நடந்த என்னை பைரவர்கள் வரவேற்றனர். சாயி பாபா கோவில் வாசலில் மட்டும் எப்படி இத்தனை பைரவர்கள் அமைதியாய் படுத்திருக்கின்றார்கள். வியந்தபடி உள்ளே நுழைந்த என்னை வரவேற்றார் திரு.சாய் பத்மா அவர்கள்.

பார்ப்பதற்கு கண்டிப்பான நபர் போல் தோன்றினாலும் முகத்தில் ஞான முதிர்ச்சியும், மனதில் ஞானத் தெளிவோடும் காணப்பட்டார். நான் சென்றபோது சத்திய நாராயணா பூஜை நடந்து கொண்டிருக்க என்னையும் கலந்து கொள்ளும்படி அன்புக் கட்டளையிட்டார்.

பூஜை சிறப்பாக நடந்தது அன்னதானத்திற்குப் பின் அவரின் கதையை கேட்டேன்.


என் கதை எதுவும் இல்லை சாயிராம். எல்லாம் சாயிராம்தான் என்றார் அடக்கமாக. அம்மாவின் தந்தை மிக தீவிர பெருமாள் பக்தர் அவரின் இறுதிக் காலத்தில் இறை சிந்தனையிலேயே இருந்த அவரின் உயிர் அவரின் உடலை விட்டு பிரிந்து பெருமாள் விக்ரகத்தில் இணைந்ததை உணர்ந்ததாகச் சொல்கிறார்.

இளம் வயதிலேயே திருமணம் முடிந்து ஆண் ஒன்று பெண் ஒன்றுமாக இரண்டு குழந்தைகளுக்கு தாயாகி இருக்கின்றார்.

மிகப் பெரிய பணக்கார வாழ்க்கை இல்லை என்றாலும் எதற்கும்



பாபாவின் அடிமை ஞானத்தாய் சாய் பத்மா



கஷ்டமல்லாத வாழ்க்கை.

இருப்பினும் தந்தையின் ஆசீர்வாதத்தாலும், குலதெய்வம் வெங்கடேஸ்வரரின் திருவருளாலும், அனைவருக்கும் நல்லவளாகவும், எளிமையாகவும் வாழ்வது இயல்பிலேயே அவருக்கு வாய்த்திருக்கிறது. இளவயதிலேயே இந்தியா முழுவதும் உள்ள புனித சேத்திரங்களுக்கு சென்று வரவும் வாய்த்திருக்கின்றது.

நான் ஏன் அந்த வயதிலேயே அவ்வளவு புனித சேத்திரங்களை தரிசித்தேன் என்று எனக்கு புரியவில்லை என்று வெள்ளந்தியாய் சிரிக்கின்றார்.

வாழ்க்கையில் இன்பம் மட்டுமே கிடைத்துக் கொண்டிருந்தால் திகிட்டுமே, அதுபோல் எங்களது வாழ்க்கையிலும் திடீரென பொருளாதார நெருக்கடி. 25 லட்ச ரூபாய் கடன் ஏற்பட்டது. செய்வதறியாத குலதெய்வத்திடம் முறையிட அவரோ நான் செய்வதற்கு ஒன்றுமில்லை உன் குருநாதர் சாயி பாபாவிடம் முறையிடு என்று கூறிவிட்டார்.

அந்த நாளில் நான் செய்த நல்ல காரியம் சட்டென்று பாபாவின் கால்களை பிடித்துக் கொண்டேன். பாபாவோ, உன் கடன்களை நான் அடைக்கின்றேன். எனக்கு ஒரு கோவில் கட்டுகிறாயா என்று கேட்க நான் உடனே தலையாட்டினேன்.

மிகவிரைவிலேயே எங்கள் கடன் தீர்ந்து எங்கள் கையில் 20 லட்சம் பணம் இருக்கும் நிலைக்கு பாபா எங்கள் பொருளாதாரத்தை மாற்றினார்.

எனவே கொடுத்த வாக்கை உடனே நிறைவேற்ற கோவில் கட்ட ஆரம்பித்திருக்கின்றார். இந்த 4 ஏக்கரில் அமைந்துள்ள கோவிலுக்கு இன்ஜினியர் யாருமில்லை பாபா சொல்ல சொல்ல நானாக கட்டியது என்றார்.

என்னால் நம்ப முடிய வில்லை என்றேன்.

உண்மைதான் சாய்ராம். இந்த கோவிலின் ஒவ்வொரு பகுதியும் பாபா சொல்ல சொல்ல அதன்படி கட்டியது ஆகும். பாபா விக்கிரகம் இருக்கும் பகுதியை மட்டும் சீரடியில் இருப்பது போன்றே கட்ட வேண்டும் என்று தொடர்ந்து 9 மாதங்கள் சீரடிக்குச் சென்று நேரில் பார்த்து மனதில் குறித்துக் கொண்டு வந்து கட்டியது என்கிறார் சாய் பத்மா.

இத்தனைக்கும் அவருக்கு எழுதவோ, படிக்கவோ தெரியாது, அதனால் என்ன சக மனிதனை மதிக்கும் பண்பு மிக அதிகமாகவே இருக்கின்றதே...

கட்டிடம் ஆரம்பித்து 9 ஆண்டுகள் ஆகியும் இன்னமும் கட்டிட வேலையை இழுத்துக் கொண்டே செல்கிறார்கள் அம்மா என்று பக்தர்கள் ஆதங்கப் படுவதாக சொன்னவர், எனக்கு வயது 67 ஆகுது சாய்ராம். இந்த கோவிலில் இருந்து ஒரு ரூபாய்



கூட என் சந்ததிகளுக்குப் போகாது. பாபா புண்ணியத்துலே ரெண்டு குழந்தைகளும் நன்றாக இருக்கிறார்கள். இன்னும் எவ்வளவு காலத்திற்கு நானே அனுபவிக்கப் போகிறேன். எனக்குப் பின்பு பாபாவின் பக்தர்கள் வந்தால் அவர்களுக்கு வசதி குறைவு வந்து விடக் கூடாதே என்று தான் அனைத்து வசதிகளையும் செய்து வைக்கிறேன். அது தான் சற்று கட்டிட வேலை நீண்டு கொண்டு போகிறது.

எவ்வளவோ பொருளாதார நெருக்கடி வந்த போதெல்லாம் பல நல்ல உள்ளங்கள் மூலமாக பாபா தன் கோவிலை தானே கட்டிக் கொண்டிருக்கின்றார். இன்னும் சிறிது வேலைதான் பாக்கி அதையும் பாபாவே பார்த்துக் கொள்வார் என்கிறார் குறையாத உற்சாகத்தோடு சாய் பத்மா.

இவ்வளவையும் தனியொரு பெண்ணாய் சாதித்தவர் பாபாவின் அருளால் இன்னொன்றையும் சாதிக்க இருப்பதாய் சொன்னார். 65 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு என அன்னதான மண்டபம் கட்டி தினமும் ஒரு வேளையாவது தொடர்ந்து அன்னதானம் செய்திட வேண்டும் அதையும் பாபாவின் அருளால் விரைவில் நிறைவேற்றுவேன் என்றார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக தான் கட்டிய பாபா கோவிலிலேயே தங்கி முழுமையாக பாபாவின் சேவைக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் ஞானத் தாய் திரு.சாய் பத்மாவோடு பேசிக் கொண்டிருந்த மூன்று மணி நேரமும் எனக்கு தனிப்பட்ட முறையில் ஊக்கமும், உற்சாகமும், புதிய தெம்பும் பிறந்தன.

பாபாவின் கருணையும் அவர் என் போன்ற காலி பாத்திரங்களுக்கு எப்படி எல்லாம் பேரருள் புரிகிறார் என்பதனையும் முழுமையாக உணர முடிந்தது.

அம்மாவிடம் பிரியா விடை பெற்று முழு மனதிருப்தியாய் இல்லம் வந்து சேர்ந்தேன்

ஓம் சாய்ராம்

பாபா சீரடியில் தன் இறுதிக் காலம் வரை யாசித்தே உணவு பெற்று வந்தார். அவர் தனக்கென்று எந்த பொருளையும் சேர்க்கவில்லை. மிக எளிய வாழ்வு அவருடையது. அவர் உடலை விட்டபோது அவரிடம் இருந்தது பதினாறு ரூபாய் தான். அவரின் இறுதி கடன்களை செய்ய அந்தப் பணம் போதுமானதாய் இருந்தது.

பணத்தாசை சிறிதும் இல்லாத பாபா ஒரு சிலரிடம் காணிக்கை கேட்டார். அக்காணிக்கையை தன்னிடம் வரும் பக்தர்களுக்கு தானமாக அளிப்பார் மிஞ்சிய காணிக்கையை விளக்கிற்கு எண்ணைக்கும் துணிக்கு விறகு வாங்கவும் செலவிட்டார். ஒரு சிலரிடம் அமைதியாக கேட்ப்பார், வேறு சிலரிடமோ அதட்டிக் கேட்பார். அவர்களும் மகிழ்ச்சியோடு உடனே கொடுத்து விடுவார்கள். ஏன் என்றால் பாபா, யாரிடமாவது காணிக்கையை கேட்டுப் பெற்றார் என்றால் அவர்களுக்கு உடனே நல்லது நடக்கப் போகின்றது என்று அர்த்தம்.

துமால் என்பவரிடம் 50 ரூபாய் காணிக்கை கேட்டார் பாபா. துமால் தன்னிடம் பணம் இல்லை என்றார் பாபா விடவில்லை. யாரிடமாவது கடன் வாங்கி கொடு என்றார். ஹரிவிநாயக் என்பவரிடம் 50 ரூபாய் கடன் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தார் துமால்.

மறுநாள் துமாலுக்கு அரசாங்கத்திலிருந்து 50 ரூபாய் சம்பள உயர்வு பற்றிய உத்தரவு அவர் வீட்டிற்கு வந்து சேர்ந்தது.

இப்படி பாபாவிற்கு காணிக்கை கொடுத்த அன்பர்கள் வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்கள் எண்ணற்றவை.

பாபா ஒரு ரூபாய் தட்சிணை பெற்றால் அதை நூறு மடங்காய் திரும்பத் தருகிறேன் என்கிறார்.



காணிக்கை

பாபாவிற்கு தட்சிணை தரும் போது யாரும் அதனை நம்ப மாட்டார்கள். ஆனால் விரைவில் அதற்குண்டான லாபத்தை பெற்று மகிழ்வார்கள்.

தட்சிணை தருவதால் தானம் செய்ய வேண்டும் என்ற உணர்வை தன் பக்தர்களிடம் தோற்றுவித்தார். மேலும் பணத்தின் மீது இருக்கும் பற்றையும் மெல்ல தளர்த்தி அவர்கள் மனதில் இறை நாட்டம் ஏற்படுமாறு அவர் மாற்றினார். இன்றளவும் மாற்றிக் கொண்டிருக்கின்றார்.

அதிகாலை எழும்போது பாபா பக்கிரிதான் ஆனால் மாலைக்குள் பக்தர்கள் பலர் தாமாகவே அவருக்கு ஏராளமான பணத்தை காணிக்கையாக கொண்டு வந்து கொட்டினர். அது வருமான வரி அதிகாரிகள் கவனத்திற்கு கூட கொண்டு செல்லப்பட்டது. ஆனால் அது முடியவில்லை. காரணம் எவ்வளவு பணம் வந்தாலும் அன்று மாலைக்குள் ஏழை பக்தர்களுக்கு உடனுக்குடன் தானமாக வழங்கி விடுவார் பாபா. மறுநாள் காலையில் ஓர் ஏழை பக்கிரியாக விடுவார்.

தட்சிணை தந்தவர்கள், தராதவர்கள் என்று யாரையுமே பாகுபடுத்தி பார்த்தது கிடையாது பாபா அவரின் அருள் எல்லோருக்கும் ஒன்றுபோல் கிட்டியது. யாருக்கும் அவர் தனிப்பட்ட சலுகை தந்தது கிடையாது. நம்மிடம் தட்சிணை வாங்குவதின் மூலம் நம் கர்மாவை நீக்கி நம்மை சுகப்படுத்துகிறார் சாயி மகராஜ் என்பதே உண்மை.



ஒருவனே தேவன்

இந்து மதத்தில் தீவிர பற்றுடையவர் அரிசீதாராம் தீட்சித். பாபாவின் தரிசனத்திற்காக நண்பர்களுடன் ஷிர்டி வந்து தங்கியிருந்தார்.

அப்போது ஓர் நாள் தன்னையும் அறியாமல் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் போது ஏசுவையும் அவர் கொள்கைகளையும் தரக் குறைவாக பேசிவிட்டார்.

பிறகு தீட்சித் அதனை மறந்துவிட்டார். மறுநாள் காலையில் பாபாவை தரிசிக்க மசூதிக்கு வந்தார். அவர் படிகளில் ஏறும் சமயம் பாபா, ஏய்... அற்பனே, அங்கேயே நில் என்னை தரிசிக்கும் தகுதி இப்போது உனக்கு இல்லை. திரும்பிப் போ.... என்று கூச்சல் இட்டார்.

அரிசீதாராம் தீட்சித்துக்கு தூக்கிவாரிப் போட்டது ஒன்றும் புரியாது விழித்தார்.

என்ன, உனக்கு ஒன்றும் விளங்கவில்லையா என்றார் பாபா.

ஆமாம் சுவாமி, நான் என்ன தவறு செய்தேன் என்று இந்த மூடனுக்கு விளங்கவில்லை. தயவு செய்து என்னை மன்னித்து தவறை திருத்திக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பு வழங்குங்கள் சுவாமி என்று பாபாவின் பாதங்களில் பணிந்தார் தீட்சித்.

பாபா அவரை தூக்கி அணைத்துக் கொண்டு கூறினார் தீட்சித் நீ வணங்கும் இறைவனையோ, உன் பாபாவையோ, யாராவது ஏசினால் உன் மனம் என்ன பாடுபடும் அது போலத்தானே நீ ஏசுவை ஏசும்போதும் அவருடைய பக்தர்களின் மனமும் புண்படும் அல்லவா, அதுவன்றி உத்தம சீலர்களை உதாசீனப்படுத்தலாமா?

உன் ஆன்மாவிற்கு அல்லா யார்? ஏசு யார்? கிருஷ்ணன் யார்? சிவன் யார்? என்று பகுத்துணரும் பக்குவம் இருப்பின் இப்படி பேசியிருக்க மாட்டாய். இவ்வுலகினில் ராமும், ரஹீம்மும் ஒன்று என்பதை உணருங்கள் என்றார் பிரம்ம ஞானியான சாயி.

தீட்சித் கண்ணீர் மல்க அறியாமல் செய்த பிழையை பொருத்தருள்வீர் கருணாமூர்த்தியே என கதறி அழ ஆரம்பித்தார்.

சரி அழாதே தவறை உணர்ந்த மறுகணமே மனத் தூய்மையுற்றாய். உனது அறியாமையை அகற்றி ஆட் கொண்டோம் என்றார் பாபா.

பாபா காட்டும் வழி



நான் யாரை எப்போது என்னிடம் இழுக்க வேண்டுமென்று நினைக்கின்றேனோ, அவர்களிடம் முன் கூட்டியே சாட்சியாளனாக அமர்ந்து விடுகிறேன். ஆனால் அது அவர்களின் புலன்களுக்குப் புலப்படாது. அவர்களுக்கு விதிக்கப்பட்ட நல்ல நேரம் எப்போது வருகின்றதோ அப்போதுதான் அவர்கள் என்னை வணங்க முடியும்.

- சாயி பாபா

எல்லாம் நீயே எனும் போது 'நான்' என்பதேது? எண்ணமும் நீயே! எழுத்தும் நீயே! தியானம் பற்றி மணிக்கணக்காய் உரையாற்றலாம். ஆயினும் உணர்பவன் தன் முழு முயற்சியால் ஓயாது பயின்றால் தானே உணர்ந்து அனுபவிக்க இயலும்.

அது போலவே உன்னைப் பற்றி ஆயிரம் கதைகளை நாங்கள் கதைக்கலாம். ஆயினும் ஒவ்வொரு பக்தனிடமும் நீயே உணர்வித்து வெளிப்படுத்திக் கொள்கிறாயே!

உனது கோடிக்கணக்கான பக்தர்களின் கோடிக்கணக்கான அனுபவங்களே அதற்கு சாட்சி.

பரம்பொருளே உம்மையா நாங்கள் விளம்பரத்தின் மூலம் பிரபலபடுத்த முடியும். புரியாத ஒரு சில கீழான மானுட சென்மங்களே உன்னைப் பற்றி விளம்பரக் காகிதங்களை விநியோகிக்கின்றன.

சாய் என்பது பரம்பொருள், அது இருப்பு, அது தன்னைத் தானே வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் பெரு நெருப்பு, அதற்கு ஏதும் விளம்பரம் தேவையில்லை. விளங்காத சில பக்த சிகாமணிகள் தாங்கள் இன்னது செய்கின்றோம் என்றறியாமல் சில செயல்களில் ஈடுபடுகின்றார்கள்.

சமீபத்தில் ஓர் கையேட்டை காண நேர்ந்தது அதில் சாயின் மகிமைகளை விளம்பரப் படுத்தி ஒரு பக்தர் அச்சிட்டு விநியோகித்ததாகவும், அவருக்கு உடனே லாட்டரியில்

64 லட்சம் பரிசு கிட்டியதாகவும் நீங்களும் விளம்பர நோட்டீஸ் அச்சிடு மாறும் இல்லை எனில் உங்கள் குடும்பத்தாருக்கு தீமைகள் நடைபெறும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது போன்ற வழிமுறைகளையா பாபா காட்டியிருப்பார் இல்லை இது போன்ற பக்தனை உருவாக்கியிருப்பாரா?

இரண்டுமே இருக்காது ஏன் என்றால் பாபா இதையெல்லாம் தாண்டிய முழு முதற் மெய்ப்பொருள்.

இப்புண்ணிய பூமியில் பல்லாயிரக் கணக்கான மகாத்மாக்கள் தோன்றிய போதும் எல்லோரிலும் முதன்மையாய் முழுமுதற் பொருளாய் தனித்து நிற்கும் பூரணனே!

இம்மானுட சென்மம் எடுத்து வந்த வேலையை செவ்வனே செய்து வருந்தி, வருந்தி, இறையே குறிக்கோள் என உருகி, உருகி, இறை உணர்வோடு, இணைந்த மகா ஆத்மாக்கள், தன்னை நெருங்கி வரும் வழிவகை அறியா மானுடர்களுக்கு அருள் புரிவதற்காய் தன் இறை உணர்வை விட்டு சட்டென கீழே இறங்கி வர மாட்டார்கள். ஆயினும் நீ... மனிதன் அல்ல ஓர் வாயில்லா ஜீவன்





அழைப்பினும் உடனே உன் பேரின்ப பெருநிலையை விட்டு கீழே இறங்கி பரிவுடன் அனைத்துக் கொள்ளும் பரோபகாரப் பரந்தாமனே!

எம்மை ஆட்கொண்ட பரம்பொருளே! எம் சற்குருவே மனித இனத்தின் புத்தியும், பக்தியும் அழிவை நோக்கி செல்வதற்கு காரணம் நீ காட்டிய வழியை புரிந்து கொள்ளாதது தான் என்பது தெளிவு. பலவித கேடுகளுடைய இம்மனித இனம் உம்மையும் உமது சத்திய வாக்கையும் தவறாக புரிந்து கொண்டு, காலம் காலமாய் வழிவழியாய் வந்து கொண்டு இருக்கும் கற்சிலையாய் உம்மையும் சமைத்து நீ இதைக் கொடுத்தால், நான் அதைத் தருகின்றேன் என்று பேரம் பேசி உம்மையும் சிறு தெய்வமாக்கி விடுவார்களோ என அஞ்சுகின்றது.

எனவே, நீ காட்டிய மெய்வழியை புரியா கீழான மந்த புத்தியை உடைய எமக்கு காட்டியருள வேணுமாய் தாழ் பணிகின்றோம் தயாளனே!

எப்போதும் போல் எழுதுகோலும் காகிதமும் தயார் எழுத வேண்டியதை எழுது எம் தேவனே! தறிகெட்டுப் போய் கனலென காய்கின்ற எம்மனம் தணியாதா என்ற ஏக்கத்தோடு உமது மெய்ஞான வழியில் செல்ல காத்திருக்கும்.....

–தொடரும்...

மகாராஷ்டிரத்தில் ஜின்டூர் பர்கானா மாவட்டத்தைச் சேர்ந்த சேலூ என்ற ஊரில் கௌரவமான ஜமீன் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர் கோபால்ராவ். இயல்பிலேயே அவரின் குடும்பத்தினர் மிகுந்த இறைபக்தி கொண்டவர்கள். ஆதலால் கோபால்ராவ்வும் ஆன்மீகத்தின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

திருப்பதி வெங்கடேஸ்வரரை தன் இஷ்ட தெய்வமாக வணங்கிய அவர் இறைவனின் அனுகிரகத்தால் பல மகான்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு இறைநிலையில் மிக உன்னதமான நிலையை அடைந்திருந்தார். ஆகையால் அவர் தன்னை நாடிவந்தோர்களுக்கும், ஏழை எளியோர்களுக்கும் தாராளமாக அருள் செல்வத்தையும், பொருட் செல்வத்தையும் வாரி வழங்கி அவர்களை ஆதரித்து வந்தார்.

அது மட்டுமல்லாது அப்போது நடந்து கொண்டிருந்த ஆங்கிலேய அரசிடமிருந்து தன் ஜமீனுக்குப்பட்ட மக்களை காப்பதற்காக மிகப் பலம் வாய்ந்த குதிரைப் படையையும், காலாட்படையையும், மற்ற பணியாளர்களையும் பராமரித்து வந்தார். கோபால்ராவ்வும் போர்த் திறமையில் சிறந்து விளங்கினார்.

ஆனால் அதே கால கட்டத்தில் பல ஜமீன்தார்கள் மக்களைப் பற்றி ஏதும் கவலை கொள்ளாமல் நல்ல ஒழுக்கங்களை புறந்தள்ளிவிட்டு, மது, மாது, என்று தீச் செயலில் ஈடுபட்டு கொடூர சுபாவம் கொண்ட காமுகனாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

எனவே கோபால்ராவ் தன்னிடமிருந்த படைபலத்தால் அவர்களை ஒழித்து மக்களை காத்து ஜின்டூர் பர்கானா மாவட்டத்தை தன் ஆளுகைக்குக் கீழ் கொண்டு வந்தார். கோபால்ராவின் ஆன்மீக பண்பும்,



வந்தார் சாயி

-ஸ்ரீராம்

வள்ளல் தன்மையும், போர் திறமையும் நாளடைவில் ஜில்லா முழுவதும் மக்களால் போற்றி புகழப்பட்டன.

இவற்றை கவனித்த ஆங்கிலேய அரசாங்கம் கோபால்ராவின் திறமைக்கு மதிப்பளித்து தேஷ்முக் என்ற பட்டத்தை கொடுத்து ஜின்டூர் பர்கானா மாவட்டத்தின் கவர்னராக பதவியில் அமர்த்தி கௌரவித்தது.

தன் இஷ்ட தெய்வத்தின் அனுகிரகத்தாலும், ஆன்மீக பேராசான்களுடனான தொடர்புகளினாலும், அவருடைய வாழ்வு ஆன்மீக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் வெற்றிகரமாக அமைந்தது.

இருப்பினும் தேஷ்முக் அவர்கள் தன்னுடைய பெரும்பான்மையான நேரங்களை ஆன்மீக பணிகளுக்கென செலவிட்டு வந்தார். அவர் நாடு முழுவதும் இருக்கும் மகான்களையும், மகான்களின் நினைவிடங்களையும் தரிசித்து வருவதை வழக்கமாக கொண்டிருந்தார். அப்படி ஓர் நாள் அகமதாபாத்தில் ஞானி சுவாக் ஷாவின் சமாதியை நெருங்கிய போது....

ஆன்மீக சுற்றுப் பயணமாக அகமதாபாத் வந்து நான்கு நாட்களாகிறது. பல மகான்களை தரிசித்துவிட்டு சிறிது ஓய்வெடுத்துக் கொண்டு இன்று சூஃபி ஞானி சுவாக் ஷாவின் சமாதிக்கு செல்வதாய் ஏற்பாடு...

அதிகாலையிலேயே எழுந்து குளித்து தயாராகிவிட்ட கோபால்ராவிற்கு எப்போதும் இல்லாமல் இன்று ஏனோ மனம் சற்று படபடப்பாய் இருந்தது. நீண்ட நாள் நண்பரை காணப் போவதுபோல் மனம் இனம் புரியாத தவிப்பில் இருந்தது.

சாரட் தாயாராகி விட்டதாக வேலையாள் தெரிவித்ததும் வண்டியில் தாவி ஏறினார். மார்கழி மாத குளிர் உடுத்தியிருந்த உடுப்பையும் மீறி குளிர்வித்தது.

அரைமணி நேர பிரயாணத்திற்குப் பின்பு சூஃபி ஞானி சுவாக் ஷாவின் சமாதி தென்பட்டது.

அவரது உடல் லேசாக நடுங்க ஆரம்பித்தது. வண்டி நின்றவுடன் கீழே இறங்கியவரின் கால்கள் பூமியில் பதிய மறுத்தன. என்னவென்று தெரியவில்லை. கோபால்ராவிற்கு அழுகை வருவது போல் இருந்தது. சாமாதியை நோக்கி நெருங்க நெருங்க அவரையும் அறியாமல் நெஞ்சு விம்மி கண்கள் கண்ணீரைச் சொறிந்தன.

தான் கொண்டு வந்திருந்த காஷ்மீரத்து சால்வையை பிரித்து கல்லறையின் மீது போர்த்தி பூக்களை சமர்ப்பித்து மண்டியிட்டு வணங்கினார். கல்லறையில் அவரின்



கைகள் பட்டதுமே ஓர் தெய்வீக உணர்வு அவரினுள் நுழைவதை உணர்ந்தார்.

திரும்பி தன் சேவகனைப் பார்த்தார். அவன் தயாராய் தர்ப்பை புல் ஆசனத்தை விரித்து வைத்திருந்தான். மெல்ல அதில் சென்று அமர்ந்து கண்களை மூடினார். சற்று நேரத்தில் ஒரு மாபெரும் ஒளி பிழம்பு அவரை ஆட்கொள்ள அவருக்கு உள் விழிப்பு ஏற்பட்டது.

அவரின் ஆன்மா விழித்துக் கொண்டு தெளிவான காட்சிகளை காண ஆரம்பித்தது. மங்கலான மேகக் கூட்டங்களில் இருந்து தகதகக்கும் பொன்னுடம்போடு ஞானி சுவாக்ஷா அவரை நோக்கி வந்தார். கோபால்ராவ் அவரை வணங்க சுவாக்ஷா அன்போடு என் சகோதரா என்று அனைத்துக் கொண்டார்.

அதன் பின்பு அவரை ஆசீர்வதித்த ஞானி, கோபால்ராவ் நீ உனது முன் சென்மத்தில் காசியில் ராமானந்தர் என்ற ஞானியாக வாழ்ந்து வந்தாய். அப்போது உன்னுடைய சீடனாக இருந்தவரே கபீர்தாஸ். இறைவனின் ஆணைக்கேற்ப இவ்வுலக மக்களை உய்விப்பதற்காக மீண்டும் கபீர் அவதரித்து விட்டார். இப்பிறவியிலும் நீரே அவருக்கு குருவாக இருப்பாய் என்று அருளி மறைந்தார்.

கோபால் ராவின் தேகம் நடுங்க வியர்த்து வழிந்தது. அதுவரை அவரை மறைத்திருந்த மெல்லிய மாயை விலகியது போலிருந்தது. தான் யார் என்பதும், தனக்கு என்ன வேலை என்பதையும் சட்டென்று உணர்ந்து கொண்டார் மனம் அமைதியையும் முகம் தேஜஸையும் அடைந்தது. அங்கிருந்து ஆனந்தத்துடன் தன் இருப்பிடம் ஏகினார்.



ஊருக்கு திரும்பியவரிடம் மக்கள் அதுவரை இல்லாத ஓர் தெய்வீகக் களையைக் கண்டனர் சொல்லிலும், செயலிலும், தோற்றப் பொழிவிலும் வெங்கடேசப் பெருமாளைப் போன்றே தென்பட்டார். அதுமட்டுமன்றி அவரின் பரிசமும் பார்வையும் பாமர ஜனங்களின் தீர்க்க முடியாத உடல் நோய்களையும் மனச் சிக்கல்களையும் தீர்த்தன.

ஒருமுறை பிறவிக் குருடான ஒரு பெண் இவரைத் தேடி வர கோபால்ராவ், வெங்கடேஸ்வரரின் நாமாவைக் கூறிக் கொண்டே அப்பெண்ணின் கண்கள் மீது மிளகாய் பொடியை தூவினார். பிறவிக் குருடான அப்பெண்மணி பார்வை பெற்றாள். தீராத வியாதியஸ்தர்கள் குணமடைந்தனர், குழந்தை செல்வம் கிட்டாதவர்கள் குழந்தை வரம் பெற்றனர் அவரை மக்கள் வெங்கடாசலபதியாகவே பார்க்க ஆரம்பித்தனர். எனவே அவரை வெங்கடேசா என்றே அழைக்கலாயினர். அவரால் சேலூ கிராமமும் பர்கானா மாவட்டமும் பெருமை பெற்றது.

என்னதான் பேரும் புகழும் கிடைத்தாலும் அவர் மனம் எப்போதும் அவரின் சீடர் கபிரையை எதிர் நோக்கிக் காத்திருந்தது. அல்லும், பகலும் தன் சீடரை எப்போது காண்போம் என்று ஏங்கியிருந்தார்.

அவரின் ஏக்கத்திற்கு காரணம் இல்லாமல் இல்லை. முன் சென்மத்தில்

ராமானந்தராக இருந்த போது, கபீர் அவரிடம் சீடராக சேர பெருமுயற்சி செய்த போது அவரின் சீடர்களால் குருவை பார்க்க விடாமல் துரத்தியடிக்கப்பட்டார்.



காரணம் அவர் இஸ்லாமியரால் வளர்க்கப்பட்டவர் என்பதால்.

கபீர் மனந்தளராமல் முயற்சி செய்து பலகாலம் காக்க வைக்கப்பட்டு ராமானந்தரின் சீடரானார். அவ்விதம் முன் சென்மத்தில் தன் சீடனை காக்கவைத்தமைக்காக இந்த சென்மத்தில் தன் சீடனுக்காக குரு வழிமேல் விழி வைத்து காத்திருந்தார். என்னே இறையாற்றலின் லீலா விநோதங்கள்.

காலம் தன் கடமையை செவ்வனே செய்து கொண்டிருந்தது. காலச் சக்கரம் 5 ஆண்டுகளை உருட்டிவிட்டிருந்தது.

கோபால் ராவ் தேஷ்முக் என்ற வெங்யசா தன் அன்றைய லௌகீக ஆன்மீக அரசியல் கடமைகளை செவ்வனே நிறைவேற்றிவிட்டு, உப்பரிகையில் அமர்ந்து வீதியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரது பார்வை யாரையோ எதிர்பார்த்து ஏங்கிப்போய் காத்திருந்தது.

அவரின் மனதை அறிந்தது போல் முழுநிலா தன் ஒட்டுமொத்த பால்போன்ற கிரகணங்களை அவரின் மேல் வீசிக் கொண்டிருந்தது விடிந்தால் முழு பௌணர்மி திதி.

கோபால் ராவ் தன் அன்பிற்குகந்தவனை எதிர் நோக்கி தவித்தும் தனித்தும் இருந்தார். நேரம் யுகம் போல் நகர்ந்து கொண்டிருந்தது.

அலுக்காமல் அமர்ந்திருந்த அந்தக் காதலிக்காக காலத்தேர் பரிதாபப்பட்டு தன் நேரக் குதிரையை விரைவாய் விரட்டியது. பொழுது புலர்ந்தது.

ஆதவன் தன் அழகிய கதர்களை பூமியில் பரப்பினான். ஆதவனின் வரவிற்காக புற்கள் எல்லாம் தன் தலையில் வெள்ளிக் குடங்களில் பன்னீரை சுமந்து கொண்டிருந்தது. தங்களை வாழவைத்துக் கொண்டிருக்கும் ஆதவனுக்காய் பறவையினங்கள் இனிய சங்கீதங்களை எழுப்பி இயற்கையை வனங்கின சூரியக் கதிர்கள் பட்டதும் பனிக் கூட்டங்கள் தலைவனை வரவேற்க சட்டென்று வழிவிட்டு விலகிக் கொண்டன. செடி, கொடி, மரங்களும் அவைகளில் பூத்திருக்கும் பூ, காய், கனிகளும் இரவெல்லாம் பனியில் குளித்து புத்தம் புதியதாய் ஆதவனை வரவேற்க சிலிர்த்து நின்றன.

சேலூ மக்கள் துயிலெழுந்து வாசல் தெளித்து கோலமிட்டுக் கொண்டிருக்க வீதியின் கோடியில் பனிக்கூட்டத்தை விளக்கி கொண்டு ஆதவனே தரையில் வந்தது போன்று ஓர் 5 வயது சிறுவன் அமைதியாக நடந்து வர அவனின் கையை பிடித்தபடி ஓர் இஸ்லாமிய மாதும் வந்து கொண்டிருக்க கோபால்ராவ் அவர்களைப் பார்த்து விட்டார்.

இரவெல்லாம் அமர்ந்திருக்க அலுப்பு கூட தெரியாமல் உற்சாகமாய் துள்ளிக் குதித்து எழுந்து கைகளை தட்டி யாரங்கே... அவர்களை அழைத்து வாருங்கள் என்றார்.



பன்னிரெண்டு ஆண்டுகள் மவுனதவம் மேற்கொள்வோருக்கு இவ்வுலகினில் அனைத்து சக்திகளும் தாமே கிட்டும் என்பது மகான்களின் வாக்கு,

மவுனம் திறக்காத ரகசியங்களுக்கோர் சாவி
மவுனம் ஆன்மாவை தரிசிக்க அகண்டதோர் பெருவழி
மவுனம் தெளிந்த நீரோடையாய் முகம் காட்டும் கருவி
மவுனம் ஆன்மீக ரகசியங்களை புரியவைக்கும் மொழி
மவுனம் அதுவே இறையின் மொழி ஆகும்.

உலக மொழிக் கெல்லாம் மூலமொழி மவுனமொழி தானே, ஆதியில் மனிதன் மவுனமாய் இருந்த வரையில் இயற்கைதான் இனிய மார்க்கமாகவும், இனம் மனிதமாகவும், மொழி மவுனமாகவும் இருந்திருக்கும். அவன் என்று பேச ஆரம்பித்தானோ அன்றிலிருந்து தான் அத்தனையும் பல கோடியாய் பிரிந்திருக்கும்.

மனிதனுக்கு பேச்சு ஆரம்பித்த பின்பு கிட்டிய லாபம் அநேகம் கோடி. ஆயினும் பரிபோன லாபமோ அநேகம் கோடி, கோடி. இவன் பேச ஆரம்பித்ததும் தான் பொறாமை எழுந்தது, வஞ்சம் வளர்ந்தது, பொய் பிறந்தது, பிரிவினை வந்தது, ஆசை, கோபம், கொலை, கொள்ளை, சூது அவ்வளவும் இவ்வுலகை சூழ்ந்தது.

நரம்பில்லா நாக்கை வைத்துக் கொண்டு, பாவம் இந்த மனிதன் எங்கே எப்போது என்ன பேச வேண்டும் என்று தெரியாமல் திண்டாடி சில நேரங்களில் எதையாவது பேசி மாட்டிக் கொண்டு பேராபத்தை வரவழைத்துக் கொள்கிறான். இவ்வனுபவம் சாதாரண மனிதரில் இருந்து உயர்பதவி வகிப்பவர் வரையிலும் அத்துப்படி. இதற்கு மேற்படி விளக்கம் தேவையில்லை.

எனவே பலதரப்பட்ட பேச்சு மொழி, உன்னதமான மவுன மொழியை அழித்து விட்டது. பேச்சு மனித குலத்திற்கு எவ்வளவோ நன்மை செய்திருப்பினும், அதிகளவிலே பேராபத்துக்களைத் தான் தந்திருக்கின்றது.

அதில் முதலாவது ஆன்மீக அதிசூட்சும நிலைகளை நம்மிடமிருந்து அழித்து விட்டது. ஆகவே தான் இன்றைக்கு ஏறக்குறைய 800 ஆண்டுகளுக்கு முன் அருணகிரிநாதருக்கு முருகப் பெருமான் சும்மாயிரு, சொல்லற, என்று உபதேசித்தார்.

ஒரே தியான அனுபவத்தை பலர் பல விதங்களில் கூறுகின்றார்களே, அப்படிக் கூற முடியுமா? பகவான் ரமணரிடம் இக்கேள்வி வைக்கப்படுகின்றது.

அறிந்தவன் தனது அனுபவத்தை சுதந்திரமாகவே கூறுவான் ஆயினும் "மவுனமே" மிகச் சிறந்த வியாக்கியானமாக இருக்கும், இது பகவான் ரமணரின் அனுபவ மொழி.

கல்லால மரத்தின் கீழ் மோன

நிஷ்டையில் நிகழ்ந்து கொண்டிருக்கும் தட்சிணாமூர்த்தத்தின் நிகழ்வு 'மவுனமே' மவுனமே சனகாதி முனிவர்களுக்கு ஆதி பரம்பொருளைப் பற்றி வேத ஞான, சூட்சும, மெய்ஞான விளக்கமாய் இருந்தது என்பர் மகான்கள்.

மனிதனுடைய இயல்பு மவுனம். மவுனத்தின் இயல்பு தவம், தவத்தின் இயல்பு இறை, இறையின் இயல்பு ஆனந்தம்.

மனிதன் என்று பேச ஆரம்பித்தானோ அன்றே அதற்கு அடிமையாகி தன் இயல்பு நிலையில் இருந்து விலகி விட்டான். ஆகையினால் மவுனத்தின் மூலம் கிடைக்க வேண்டிய மகத்தான சக்திகள் கிட்டாமலே போய் விட்டது.

இன்று நான் மவுன விரதம் இருக்கின்றேன் என்று மனம் முழுவது பலவித சிந்தணையின் அசைவோட்டத்திலே இருப்பதல்ல மவுனம். வாய்ப் பேச்சை மட்டும் நிறுத்துவதா மவுனம். முயன்றால் வாய் பேச்சை நிறுத்தி விடலாம். மனம் பேசுவதை நிறுத்த முடியுமா?

முடியும், முடிந்தால் அதுவே மவுனம்.

வார்த்தைகள் இல்லா மறைஞானப் புத்தகம் மவுனம் நாம் வாசிக்கத் தயாராய் இருப்பின், வாசிக்க, வாசிக்க இதற்குள் மகா வாக்கியங்கள். மவுனம் என்பது வெளிச்சம், நம்மை நாமே இதற்குள் தரிசிக்கலாம். மவுனம் என்பது போதி மரம். இதுவரை இவ்வுலகு கூறா உண்மையினை கூறும். மவுனம் என்பது வரம் நம்மிடம் நாமே வாங்கிக் கொள்ளக் கூடியது.

சரியோ, தவறோ, நாம் பேச ஆரம்பித்தால் மணிக்கணக்கில் பேசுவோம். ஐந்து நிமிடம் பேச வேண்டியதை அரை மணி நேரம் பேசுவோம். பல நேரங்களில் என்ன பேசுகிறோம், எங்கே பேசுகிறோம், யாரிடம் பேசுகிறோம் என்பதைக் கூட சிந்திப்பதில்லை. ஆனால் புத்திசாலி அடுத்தவரை பேசவிட்டு மவுனமாய் இருந்து எதைப் பேசவேண்டுமோ அதை மட்டும் பேசி காரியம் சாதிப்பார்.

அதிகம் பேசாதவனை உலகம் விரும்பும்
அளந்து பேசுபவனை உலகம் மதிக்கும்
பேசா ஞானியை உலகம் தொழும்.


மவுனத்தின் வெளிப்பாடுகள் பல, கரை காணா இன்பத்திலும் மனிதன் மவுனிக்கின்றான். துன்பத்தின் உச்சியிலும் மவுனிக்கின்றான்.


பேசா பெருமையினான் என்கிறார் தாயுமானவர்

வாக்கு இறந்த பூரணமே என்கிறது திருவிளையாடற் புராணம். மவுனம் வேறு, அமைதி வேறு, புயலுக்குப் பின்னும், போருக்குப் பின்னும் வருவது அமைதி அது மேலோட்டமானது. மவுனம் என்பது உள்ளிருந்து வருவது, எண்ணங்கள் அற்று வருவது மவுனம்.

பேசாதவன் தங்கம், பேசுகிறவன் வெள்ளி
பேசுபவன் விதைக்கின்றான்
பேசாதவனே அறுவடை செய்கின்றான்.
பேசாத வார்த்தைக்கு நாம் தலைவன்
பேசிய வார்த்தைக்கு தொண்டன்
காதை கொடு, வாயை மூடு!

(வாய்பிருந்தால் வளரும்)





இன்றைக்கு சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு கும்பமுனிவரும், ஆதிசக்கரர், விவேகானந்தர், ஸ்ரீராகவேந்திரர் ஆகியோரது பாதம் பட்ட புண்ணிய பூமியும் நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும், பாடல் பெற்ற புண்ணிய நகரம் குடமூக்கு (எ) திருக்குடந்தை அருகில் உள்ள திருபுவனம் என்னும் சிற்றூரில் தோன்றியவர் தட்சிணாமூர்த்தியின் மறுவடிவான ஞான யோகி சற்குரு ஸ்ரீ மௌன சுவாமிகள்.

திருபுவன தலத்தில் சுவாமிகள் சாதாரண மனிதர்களுக்கு எட்டாத மௌனத்தையும், ஏகாந்தத்தையும் பெற்று, ஏக பரிபூரண சுத்த பரப்பிரம்மமாய் சுற்றித் திரிந்த காலம் அது. சுவாமிகள் அப்போதெல்லாம் காடுகளுக்கிடையே சென்று மரக்கிளைகளிலேயே தங்கி தவம் இயற்றுவது வழக்கம்.

சுவாமிகள் கடுமையான தவத்தின் மூலம் தன் இமைகளை இமைக்க வொடாமல் மரத்துப்போகச் செய்திருந்தமையால் சுவாமிகளின் கண் இமைத்ததே இல்லை. அசைந்ததில்லை, தூங்கியதும் இல்லை, அவர் எப்போது ஆகாரம் கொண்டதும் இல்லை. அதைப் பற்றி ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களின் அருள் வாக்கினிலேயே கேளுங்கள்.

மகா ஞானியாகிய ஸ்ரீ மௌன சுவாமிகள் கண் கொட்டியதில்லை, தூங்கியதில்லை, அசைந்ததில்லை, பக்தர்கள் சிறிது ஆகாரத்தை வாயில் திணிப்பார்கள். இரண்டு மூன்று நாட்கள் ஆனாலும் வைத்த ஆகாரம்

குடந்தை சற்குரு



வைத்தபடியே இருக்கும். பிறகு அதை எடுத்துவிட்டு வாயை சுத்தம் செய்து வேறு ஆகாரத்தை வைப்பார்கள். அவர் வாழும் காலத்தே மோட்ச நிலையை அடைந்த மகான் என்று அருளுகிறார் பெரியவர்.

சுவாமிகளின் நிலையை நாம் விரித்துரைப்பது மிக்க கடினம். எனவே சுவாமியின் நிலையை ரிபு கீதையின் மூலம் அறிவோம். பரம்பொருளுக்கு, நான் பூரண சுகவாசி என்னும் பாவனையே அபிஷேகம், நான் கட்டற்ற சுதந்திரன் என்பதே ஆடை, நான் ஆன்மா என்று எண்ணுவதே எனது பணிகள் முக்குண விருத்திகளை விடுதலே அட்சதை, நான் குரு, ஈசன் என்னும் பேதம் ஒழித்தலே வில்வம். துர்க்குண வாசனை தவிர்த்தலே தூபம். நானே நிர்குண பரமசிவன் என்றும் தியானமே தீபம், பரமாத்ம ஞானமே நீராஞ்சனம் தெரிவதெல்லாம் பிரம்மன் என்றும் காட்சியே மலர்மாலை. என்னிடம் நாமரூபங்கள் எதுவும் இல்லை என்றும் சிந்தையே நாமசங்கீர்த்தனம். வேதாந்த நூல்களால் சோதிக்கப்படும் ஞான வடிவு நானே அகில மகா மௌனத்தின் பலமாக நிற்கும் ஆனந்த ரூபமான சொரூபம் நானே! என்பதற்கு எள் முனையளவு கூட குறையாது பரப்பிரம்ம சொரூபமாகவே குடந்தை நகரில் தற்போதுள்ள மவுனசாமி மடத்துத் தெருவில் அருளாசி புரிந்து வந்தார்கள்.

சுவாமிகள் ஊன் உறக்கம் தவிர்த்து கடுந்தவத்தினால் தன் ஊன் உடலிலே தோன்றி ஜீவ அமிர்தத்தை தன் மணோமணி என்னும் உள் நாக்கின் மூலமாக மீண்டும் தன் உடலுக்குள்ளே செலுத்தி ஆடாமல் அசையாமல் நடை உடை பாவனை தவிர்த்து 25 ஆண்டுகள் சமாதி நிலையிலேயே அமர்ந்து பக்தர்களுக்கு அருள்பாலித்து வந்த சாட்சாத் பரம்பொருளே யாவார்.

சுவாமிகள் மகிமை புரிந்து அவரை தரிசித்த ஞானிகள் ஏராளம். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் பிரம்மஞான சபையின் தலைவராகிய அன்னிபெசன்

ஸ்ரீ மௌன சுவாமிகள்

அம்மையார் அவர்கள் சுவாமியின் பெருமையை உணர்ந்த அம்மையார் சுவாமிக்கு அலங்கார வளைவு ஒன்றை கட்டிக் கொடுத்துள்ளார்கள் அதை நாம் இன்றும் காணலாம்.



மேலும் சுவாமி விவேகானந்தர் தன் அமெரிக்கப் பயணத்தை முடித்துக் கொண்டு குடந்தை வழியாக நாடு திரும்பும்போது சுவாமிகளை தரிசித்திருக்கிறார். சுவாமிகள் விவேகானந்தருக்கு ஒளிபிழம்பாக காட்சி தந்திருக்கிறார்.

சுவாமி விவேகானந்தர் இங்கு 3 நாட்கள் தங்கிச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் காஞ்சிப் பெரியவர், ஆற்காடு நவாப், சுவாமி சிவானந்தா, வாடிப்பட்டி சொக்கையா சுவாமிகள், திரு கள்ளியடிபிரம்மம், ஸ்ரீ அருணாச்சல அவதூதர், திரு காமாட்சி அம்மாள், திருசுப்பையா சுவாமிகள், திருசிவப்பிரகாச சுவாமிகள், ஸ்ரீ பாண்டித்துரை சுவாமிகள் ஆகியோர் சுவாமியை தரிசித்திருக்கின்றனர்.

சுவாமியின் சமாதிக்குப் பின்பு திருவேதாத்திரி மகரிஷிகள், திரு.கிருபானந்த வாரியார், திருமுத்துராமலிங்கத்தேவர் ஆகியோரும் தரிசித்திருக்கிறார்கள்.

சுவாமிகளின் அதிர்ஷ்டானத்தை இன்றும் மக்கள் மனமுருகி வணங்கி ஏராளாமான நற்பலன்களை பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள் என்பது கண் கூடு.

மேலும் ரிஷிகேஷ் சுவாமிகள் திரு.சிவானந்தா அவர்கள் தன் ஆன்மசுக அனுபவம் என்று புத்தகத்தில் வாமத்தேவர், ஜடபரதர், அக்கல்கோட் சுவாமிகள் வரிசையில் எல்லாம் கடந்த நிலையில் குடந்தை ஸ்ரீ மவுனகுரு சுவாமிகள் அவர்கள் பிரம்ம சொரூபமாய் விளங்குவதாய் குறிப்பிட்டுள்ளார்.

சுவாமிகள் தன் இறுதிக் காலம் மண், பொன், பொருள் போன்ற உலக விசயங்களில் கிஞ்சித்தும் பற்று கொண்டாரில்லை. ஆதலால் இன்று வரை அன்னாரது ஆலயத்தில் நன்கொடைகள் வாங்கப்படுவதில்லை.

ஆகையால் கடந்த 100 ஆண்டுகளாக சுவாமியின் ஜீவசமாதியானது கீற்றுக் கொட்டகையிலேயே தான் இருந்தது. கடந்த சில ஆண்டுகளாகத் தான் அறப்பணி செம்மல்கள் சிலரால் சிறு சிறு கட்டிட வேலைகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஸ்ரீ மௌன சுவாமியின் அருளுக்குப் பாத்திரமான பக்தர்கள் தமது வேண்டுதல்கள் நிறைவேறியவுடன் அவர்களே தாமாக முன்வந்து சில கட்டிடப் பணிகளை ஏற்று செய்கின்றார்கள். அதை தவிர டிரஸ்ட், அமைப்பு என்ற பெயரில் மடத்திற்கு நன் கொடைகள் பெறுவதில்லை. இருப்பினும் கடந்த சில ஆண்டுகளாக எந்தத் தடையுமின்றி சுவாமிகளது அனைத்து விசேசங்களும் மிகச் சிறப்பாக நடை பெற்றுக் கொண்டிருக்கிறது.

அதை தவிர சுவாமிகளது ஜீவ சமாதிக்கு அருகிலேயே சுவாமிகளால் ஈர்க்கப்பட்ட திரு.அருணாசல அவதூதர் என்ற ராஜயோக மகாஞானியும், சுவாமிகளுக்கு அருட் தொண்டாற்றிய திரு.காமாட்சி அம்மையார் என்ற கர்ம யோகியுனுடைய சமாதியும் அருகருகே உள்ளது.

சுவாமிகள் சித்திரைமாதம் 28ந் தேதி புதன்கிழமை உத்திர நட்சத்திரம் (மே மாதம் 10ந் தேதி) 1899 ஆம் ஆண்டு ஜீவ சமாதி ஆனார்கள்.

குடந்தை ஸ்ரீ ஆதி கும்பேஸ்வரர் கோவிலின் பின்புறம் மௌனசுவாமிகள் மடத்துத் தெருவில் சுவாமிகள் ஜீவசமாதி அமைத்திருக்கின்றது.

நம்முடைய உடல் அன்னமய கோசம் என்றழைக்கப்படுகிறது. ஏன்என்றால் உணவினால் ஆனதே நமது உடல் என்பதால். எனவே உணவை நாம் பிரம்மம் என வழிபட்டு அதற்குண்டான மரியாதையோடு வாழை இலையில் பரிமாறி தரையில் அமர்ந்து வேறு சிந்தனையின்றி பேசாது உணவை ரசித்து ருசித்து நிதானமாக அருந்தும் நிலை ஒரு காலத்தில் இருந்தது.

ஆனால் இன்று நிறைய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறது பல வீடுகளில் சாப்பாட்டு மேசை என்று ஆரம்பித்து இன்று தட்டை கையில் ஏந்திக் கொண்டு சோபா, சேர், டேபிள் , மொட்டைமாடி கைபிடிச்சுவர் என்று ஒரு கையில் செல்லும் மறுகையில் சோறுமாக அன்னத்தை பிரம்மம் என்று எண்ணிய காலம் போய் உணவை பேஷனாக மாற்றிக் கொண்டு, ஆரோக்கியத்தையும், நல்ல ஒழுக்கத்தையும் விட்டு எங்கோ கேடு கெட்ட நாகரீகத்தை தேடி ஓடிக் கொண்டிருக்கின்றோம்.

அன்னத்தின் சிறப்புகளை நமக்கு எடுத்துக்கூறாத மகான்களே இல்லை. அனைவரும் அன்னதானத்தை சிறப்பித்து கூறுகின்றனர். நமது சாயி மகராஜ் அன்னதானம் செய்வதை பற்றி படித்தும் கேட்டும் இருப்பீர்கள்.

ஏனையோர் எப்படியாயினும் செல்லட்டும் நாம் சாயி நாதரின் பக்தர்கள் முதலில் நாம் மாறிக் கொள்வோம்.

தரையில் சம்மணமிட்டு சாப்பிடுவதே சரியான முறை. அதுவே ஆரோக்கியத்திற்கு ஏற்றது, ஏன் தெரியுமா?

சம்மணமிட்டு அமரும் போது கால்கள் குறுக்காக இருக்கும் இது பத்மாசன நிலை போன்றது இந்த நிலையில் மனம் சாந்தமாகும். சாப்பிடும் உணவும் எளிதில் சீரணமாகும்.

சம்மணமிட்டு அமரும்போது நமக்கு இரண்டுவிதமான பலன்கள் கிடைக்கின்றது. யோகா செய்யும் பலனோடு சரியான முறையில் சாப்பிடவும் முடிகின்றதல்லவா. பத்மாசன நிலையில் அமரும் போது முதுகெழும்பிற்கு அதிக அழுத்தம் ஏற்படாது. முதுகெழும்பிற்கு அழுத்தம் குறையும் போது மனம் இயல்பாகவே சாந்தமாகிவிடும்.

கீழே அமர்ந்து உணவருந்தும் போது சாதத்தை பிசைந்து உருட்டும் போது தன்னை அறியாமலே உடல் சற்று முன்னோக்கி வரும். அதை வாயில் இட்டு விழுங்கும் போது பின்னோக்கி செல்லும். இப்படி முன்னும் பின்னுமாக அசைவுகள் தொடர்ச்சியாக நடக்கும் பொழுது சீரணத்திறன் உருவாகும். திரவங்கள் நன்றாக சுரக்கும். அடிவயிற்று தசைகளும், சிறப்பாக இயங்கும் இதனால் செரிமானம் எளிதாகும்.

உட்காருவதும், எழுவதும் நல்ல உடற்பயிற்சி தரையில் சம்மணமிட்டு ஒருவரால் சாப்பிட முடிகின்ற தென்றால் அவர் ஆரோக்கியமாக இருக்கின்றார் என்று அர்த்தம்.



தரையில் அமர்ந்து உணவருந்துவோம்

மனிதனுடைய மூளையின் எடை சுமார் 1360 கிராம்கள் இரண்டாயிரம் கோடி செல்களுக்கு மேல் உடையது. அவற்றில் ஒரு விழுக்காட்டைத் தான் மனிதன் உபயோகப்படுத்துகின்றான்.

ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், கலிலியோ, பெட்ரண்ட் ரஸ்ஸல் போன்ற மேதைகள் தங்களது மூளையின் அளவில் வெறும் மூன்று விழுக்காட்டை மட்டுமே பயன்படுத்துகிறார்கள் என்கிறது விஞ் ஞானம். மூன்று விழுக்காட்டிற்கே இத்தகைய கண்டுபிடிப்புகள் என்றால்?

அப்படியானால் நாம் எல்லாம் ஒரு விழுக்காட்டையே சரியாக பயன்படுத்த வில்லை என்றல்லவா தெரிகிறது. இதன் மூலம் நம் மூளையில் கோடிக்கணக்கான செல்கள் பயன்படுத்தப் படாமல் இருக்கின்றன என்பதும் புரிகிறது.

என்னதான் வழி? ஒரே வழி, தியானம் தான்.

நாம் நம்முடைய மனதை ஒருமுகப்படுத்தி தியானம் செய்யும் பொழுது நமது மூளையில் தோன்றும் ஆல்பா என்னும் கதிர்வீச்சு நம்முடைய செயல்படாத செல்களை செயல்பட வைக்கின்றன. அதன் மூலம் நம் மூளை சுறுசுறுப்பாக செயல்பட ஆரம்பிக்கும். மேலும் நமது உடலுக்கு ஆக்ஸிஜன் தேவை குறைந்து ரசாயன மாற்றங்கள் 20 சதவீதம் குறையும். இதயதுடிப்பு நிமிடத்திற்கு 3 முதல் 5 வரை குறையும். இந்நிகழ்வுகள் ஏற்பட்டால் நமது உடலில் என்ன நிகழும் தெரியுமா! ரத்த ஓட்டம் சீராக்கப்பட்டு உடல் உபாதைகள் நீங்கும், புத்துணர்ச்சி உண்டாகும். கழிப் பொருட்கள் அகற்றப்பட்டு அசதி, சோர்வு, மறையும், புத்திசாலித்தனம் பெருகும், பொறாமை மறையும், ஞாபகசக்தி வளரும் சர்க்கரை நோய் சீர்படும் போதை பழக்கத்தை கைவிட வழி வகுக்கும், மனம் அடங்கும், தியானம் செய்வதால் நாம் இந்நிலையை பெற இயலும்.

தியானத்தைப் பற்றி புரியாத சிலர், மனிதனை குழப்பி எல்லாவற்றையும் துறந்தவன் தான் தியானம் செய்யலாம் என்றும் தியானம் செய்தால் சாமியாராகி விடுவார்கள் என்றும் அச்சம் கொள்கின்றனர்.

தியானம் இருவகைப் படும், ஒன்றைநோக்கி மனதை குவித்தல் ஒருவகை. எல்லா எண்ணங்களில் இருந்தும் விலகி ஏதும் அற்றதாகி இருத்தல் மற்றொரு வகை தியானம்.

முதல் வகை நம் போன்ற சாதாரண மக்களுக்கானது இரண்டாம் வகை ஞானியருக்கும், யோகியருக்குமானது.

தற்போதைய பரபரப்பான வாழ்க்கையில் இருந்து சற்றே விலகி தியானம் தரும் அமைதியுடன் தனது கர்மாவை விலக்கும் பொருட்டு தனது வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவே நாம் முதல் வகை தியானத்தை செய்து தான் பார்ப்போமே. அதைச் செய்தாலே போதும்! ஞானியரையும் யோகியரையும் நாம் நம்முடன் இணைத்து குழப்பிக் கொள்ள வேண்டாமே!



தவிர என் குடும்பம், என் குழந்தைகள் என்பது பொய்யலவே வாழ்க்கையின் நிஜங்கள், உண்மையில் சம்சாரியாக வாழ்ந்து பிரச்சினைகளை எதிர் நோக்குகிறவர்களுக்குத்தான் தியானம் கட்டாயமே தவிர, பிரட்சனையே இல்லாத சன்னியாசிக்கு இல்லை.

தியானத்தில் மூன்று படிகள் உண்டு, நினைப்பவன் ஒருவன், நினைவு ஒன்று, நினைக்கப்படும் பொருள் ஒன்று ஆக மூன்று படிகள். தியானத்தில் ஈடுபடும்போது சாதகன் நினைப்பதை மறக்கின்றான். அடுத்த நிலையில் நினைக்கப்படும் பொருளை மறக்கிறான், மிகுதி இருத்தல் நினைவு, அதையும் அழித்து விட்டால் அதுவே நிர்விகல்ப்ப சமாதி.

இப்படி முற்றும் கரைந்த நிலையில் மனம் மறைந்து ஆன்ம தரிசனம் கிடைக்கும். ஆன்மா பரமாத்மாவுடன் கலப்பதையே நாம் சமாதி நிலை என்கிறோம். இதன் மூலம் இறைவனுடன் நம்மை ஐக்கியப்படுத்திக் கொள்வதன் மூலம் நமது முழுத்திறமையையும் வெளிப்படுத்தும் ஆற்றலை நாம் பெறுகிறோம்.

நம் நாட்டு மக்கள் தொகையில் ஒரு சதவீத மக்கள் தியானம் செய்வார்களேயானால் 10 சதவீத குற்றங்கள் குறையும்.

உலகில் லௌகீக வாழ்க்கையில் நாம் வெற்றி அடைய முதல் வகை தியானமே போதுமானது. அதற்கு நாம் முதலில் தேட வேண்டியது நல்ல குருநாதரையே ஆகும்.

அவரே நம்மை இயற்கையை உணர வைத்து அதன் மூலம் இறையுணர்வாகிய பிரபஞ்ச அறிவோடு நம்முடைய எண்ண அதிர்வுகளை இணைத்து நம்மை பேரின்ப பெருநிலைக்கு கொண்டு செல்லும் பரம் பொருள் ஆவார்.

இதுவே நமது பிறவியின் நோக்கமாகும்.

செய்துதான் பாருங்களேன் தியானம்



பரப்பிரம்மம்

உளத்தை சடலத்தில் இருந்து உயிரை பிரித்துணர்ந்த மகான்கள் உடலை மறந்து எப்போதும் உயர்ந்த சமாதி நிலையில் இருப்பார்கள். அந்நிலையில் இருந்து கொண்டே சாமானியர்களுக்கு புரியாத அசாதாரணமான ஞானத்தை வெளிப்படுத்தக் கூடிய செய்திகளை கூறுவர்.

ஆனால் சாயி மகராஜை பொருத்த வகையில் எதை ஒன்றையும் அடைவதற்காக அவர் ஆழ்ந்த தியானத்தில் இருக்க வேண்டிய அவசியமில்லாது இருந்தார். ஏன் எனில் ஒவ்வொரு கணமும் அவரால் இரண்டு வித மனநிலைகளில் இருந்தும் இயங்க முடிந்தது.

மிக உயர்ந்த உன்னத இறையுணர்வில் திளைத்திருந்த போதும் தன்னருகே வரும் ஜீவராசிகள் எதுவாயினும் அவைகளுக்காக இறங்கி வந்து அவர்களின் பிரட்சனைகளுக்காக செவி சாய்த்து அவர்களின் லௌகீக, ஆன்மீக விசயங்களை வழி நடத்துவார்.

ஒரே சமயத்தில் அவர் இரண்டு நிலைகளில் தன் சக்தியை பிரயோகப்படுத்த வல்லவராயிருந்தார். ஆயினும் சில மகான்கள் இறையுணர்வில் இணைந்திருக்கும் போது மனிதர்களுக்காக இறங்கி வர மாட்டார்கள்.

அத்தி பூத்தார் போல் எப்போதாவது சிறிது நேரம் மிக்க சிரமத்துடன் பிறருடைய உள்ளத்தில் இருப்பதை அறிந்து கூறுவார்கள். பின் பழைய நிலைக்கே திரும்பி விடுவர்.

ஆனால் பாபாவிற்கு பிறர் மனதை அறியவும் நடந்தது, நடப்பது, நடக்கவிருப்பதைப் பற்றிய அறிய எந்த முயற்சியும் தேவையில்லாமல் இருந்தார் ஏன் என்றால் எல்லா நேரங்களிலுமே அவர் எல்லாவற்றையும் அறியும் நிலையில் இருந்தார்.

பரப்பிரம்மத்தின் தன்மை அது தானே!



பாபாவின் அருள் மொழி

யோக சாதனைகளோ, ஆறு சாஸ்திரங்களோ, கடினமான கண்ட யோகமோ உமக்குத் தேவையில்லை. கடின தவமும் வேண்டா, அடர்ந்த கானகத்திற்கும் போகத் தேவையில்லை. உடலை பட்டினி போடும் உபவாச தீட்சைகளும் தேவை இல்லை. காவியுடையும் வேண்டுவன இல்லை. கமண்டலமும் அவசியம் இல்லை.

நீங்கள் உமது வீட்டிலேயே உமது காரியங்களை செய்து கொண்டு இருங்கள் உங்கள் கடமைகளை தவறாது செய்து வாருங்கள் சிறிதளவு நேரத்தை ஒதுக்கி என் நாமத்தை நாமஸ்மரணை செய்யுங்கள். என் கதைகளை பிரேமையுடன் கேளுங்கள். மனனம் செய்யுங்கள், என்னை கோவிலுக்குள் வைத்து கட்டுப்படுத்தாதீர்கள். உங்கள் இதயக் கோவிலுக்குள் வைத்திருங்கள். அஷ்டோபசார, ஷோடோபசார பூஜைகள் செய்து அழுத்துப் போக வேண்டி யதில்லை. மானசீகப் பூஜைகள் தொடர்ந்து செய்து வாருங்கள். அப்போது பாருங்கள்.

நீங்கள் மாயைக்கு வெகு தூரத்தில் இருப்பீர்கள் ஞானம் உமது காலடியை தொட்டுக் கொண்டிருக்கும். முக்தி நிச்சயமாக உங்கள் வீட்டு வாசல் முன் நின்று கொண்டிருக்கும் சாதனையைத் தொடங்காமலே இது அசாத்தியம் என்று கருதாதீர்கள். ஒரு புலுவே அழகிய வண்ணத்துப் பூச்சியாக மாறும் என்பதை நினைவில் கொள்ளுங்கள் அது போதும் என் உதவி உங்களுக்கு எப்போதும் கிடைக்கும்.

அனைத்துவிதமான பயங்களில் இருந்தும் விடுபடுங்கள் உங்களுக்குள்ளே இருக்கும் சுயத்தை உணர்ந்து கொள்ளுங்கள் மதம், இனம், மொழி, கலாச்சாரம், பிரிவினையை தவிருங்கள் பிறப்பின் ரகசியத்தை தெரிந்து கொண்ட நீங்கள் இறப்பின் ரகசியத்தையும் தெரிந்து கொள்ளுங்கள் வாத பிரதிவாதங்களை தவிர்த்து மௌனத்தை கடைப்பிடியுங்கள். முட்டாளாக்கும் மூட நம்பிக்கையை தவிர்த்து மெஞ்ஞானத்தை உணருங்கள்.



ரம்யா முருகதாஸ்



அன்னதானம்

அன்னமே பிரம்மம் இவ்வுடல் அன்னமய கோசம் எனப்படும். அன்னத்தினால் ஆனதே இவ்வுடல்.

பசியோடு இருப்பவனுக்கு முதலில் உணவளி பின்பு உபதேசம் செய் என்றார் – விவேகானந்தர்.

தனியொரு மனிதனுக்கு உணவில்லை எனில் செகத்தினை அழித்திடுவோம் – பாரதி

நம் சத்குரு சாயி மகராஜ் அவரே அன்னம் சமைத்து தன் கைபடவே பறிமாறி தன்னை காண வந்த பக்தர்களை பசியாற வைத்திருக்கிறார் என்பதை நாம் அறிவோம்.

வள்ளபிரான் ஏற்றி வைத்த அன்னதான பெருநெருப்பு இன்றும் அணையாது எரிந்து கொண்டிருப்பதை உலகறியும்.

நம் மகான்களும், ஞானிகளும், சித்தர்களும் பசித்தோருக்கு அன்னம் அளிப்பதை முதன்மையாக கூறியிருக்கிறார்கள்.

இந்த அன்னதானப் பணி அனைத்து சாயி மகராஜ் ஆலயங்களிலும் தினந்தோறும் நிகழ்ந்து கொண்டிருப்பதை சாயி பக்தர்கள் அனைவரும் அறிவர். பசியோடு இருப்பவர்களிடம் ஞான உபதேசம் எடுபடாது. எனவே பசித்தோருக்கு முதலில் உணவளி பின்பு உபதேசம் செய் என்பதே சாயி மகராஜ் வாக்கு.

அவ்வாக்கினுக்கேற்ப எமது ஸ்ரீ சாய்ராம் ஆத்மஞான சபை சார்பாக வாரம்தோறும் அன்னதானம் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. வருகின்ற 13.04.2018 வரை 93வது வாரங்களாக தொடர்ந்து பக்தர்களின் பிரார்த்தனையும், அன்னதானத்தையும் சாயி மகராஜ் பக்தர்கள் குழு மிகச்சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. இதில் நீங்களும் பங்கெடுக்க விரும்பினால் உங்கள் பிராத்தனையை தெரிவித்து அன்னதானத்திற்கான காணிக்கையை அனுப்பலாம்

காணிக்கை அனுப்ப வேண்டிய முகவரி:-

S.Jayanthy

93/34, K.H.Road 2nd Floor, (Opps SBI Bank)

Ayyanvaram, Ch-23.

ஆன்லைன்னில் அனுப்புவோர்

S.Jayanthy,

INDIAN BANK, A/CNo:

602264370

IFSC CODE NO:

IDB000P056



பகவத் கீதா அனைவருக்கும் தெரியும். குரு கீதா ஒரு சிலருக்கே தெரியும். அனைவருக்கும் தெரிய வேண்டி குரு கீதா சுருக்கம்.

குரு வாழ்க, குருவே துணை

குருவே பிரம்மா, குருவே சிவன், குருவே விஷ்ணு, குருவே தந்தை, குருவே தாய், குருவே உண்மை நண்பன்.

குருவிற்கு உணர்வு மயமாக தொண்டு செய் அவர் உனக்கு பிரம்ம வித்தையை போதித்து தெய்வீக மார்க்கத்தை காட்டியருள்வார்.

அனைத்து தேவர்களையும், மகான்களையும், ரிஷிகளையும், சித்தர்களையும் குருபூர்ணிமா தினத்தில் ஆராதிப்பாய்.

அவர்கள் உன்னை ஆசீர்வதித்து காத்திடுவர்.

ஆத்மஞானம் அடைவதற்கு குருவின் அருள் மிக அவசியம் ஆண்டவனிடம் வைத்திருக்கும் அளவு பக்தியை ஆசாரியனிடமும் வை அப்போது தான் உனக்கு உண்மை புலப்படும்.

நீ இறைவனை உணர்வதற்கு குருவிடம் அற்புதத்தை எதிர் பார்க்காதே, நீயே கடுமையாக சாதனை செய்வாயாக.

அவர் உனக்கு ஊக்கமூட்டி கஷ்டங்களையும், தடைகளையும் நீக்குவார்.

குருவிடம் குற்றம் கண்டுபிடிக்காதே, நீ குற்றம் கண்டால் அது உனது ஆத்ம முன்னேற்றத்தை தடுக்கும்.

அவரை ஆராதி, தெய்வமாக ஏற்றுபோற்றி கொண்டாடு

குருவிற்கு சீடனுக்கும் உள்ள தொடர்பு தெய்வீகமானது

ஆயுள் முடியும் வரை இத்தொடர்பை துண்டிக்காதே

உன் தந்தை உனக்கு ஸ்தூல உடலை மட்டுமே அளித்தார்.

ஆனால் குருவோ சம்சார சாகரத்தை கடப்பதற்கு உதவி செய்கிறார். அவர் உனது உலக பற்றை மாற்றுகிறார். அவரது உபதேசங்கள் உன் கண்களை திறக்கும்.

அவர் உனை அமரத்துவமாகிய அமுதத்தை அருந்த அருள் புரிகின்றார். கோடிக்கணக்கான பிறப்புகளிலும் அவருடைய நன்றி கடனை உன்னால் தீர்க்க முடியாது.

ஒரே குருவை நம்பிக்கையுடனும் பக்தியுடனும் உறுதியாகப் பற்றிக் கொள். இதுவே உனது குறிக்கோளை தீவிரமாக அடைவதற்கு சிறந்த வழி.

குரு கீதா

ஓஷோவின் பார்வையில் சற்குரு

ஞானியை பின் தொடர் அப்போது குருடர்கள் மத்தியில் உன் ஞானம் பரிசுத்தமாகும்.


இந்த சகதியில் இருந்து நிலை மாற்றம் கொள்ள ஓரே வழி ஏற்கனவே ஞானியாகிப் போன ஒருவரோடு இசைந்து போவதுதான். நீயோ தூங்கிக் கொண்டிருக்கிறாய் விழித்திருப்பவனே தூங்குபவனை எழுப்ப முடியும்.

தூக்கத்தில் இருந்து விடுபட உதவ முடியும்.

சுதந்திரமாக இருப்பவர் ஒரு காலத்தில் தானும் அச்சிழைில் இருந்தவர்தான். இப்போது அங்கில்லாத ஒருவர் தான் உன்னை எழுப்ப இயலும். எதார்த்தை புரிந்து கொள்ள வைக்க முடியும். மனோவசியத்தில் இருந்து விடுபட உதவி செய்ய முடியும். நமது பழகிப்போன நிலைமையிலிருந்து மாற்றி சிறையிலிருந்து விடுபடும் வழிமுறைகளை வகுத்துச் சொல்ல முடியும்.

ஆனால் உனக்குள்ள ஓரே நம்பிக்கை அப்படிப்பட்ட ஞானி ஒருவரோடு இடையறாத தொடர்பு வைத்திருப்பது தான். அவரைத்தான் சத்குரு என்கிறோம். அப்படி ஒருவரை கண்டு கொண்டால் வாய்ப்பை நழுவ விட்டு விடாதே! உடனே அவரிடம் சரணடைந்து விடு அவருடைய இயல்பில் உன்னை கரையவிடு, அவருடைய விழிப்பை பெற்றுக் கொள். அவருடைய மனம் உன்னைச் சுற்றி பரவி இருக்கட்டும் நீயும் அப்படி விழித்திருக்கும் நாள் வெகு தொலைவில் இருக்காது. நீயும் ஓர் புத்தனாவாய்.

நீ, ஒரு புத்தனாகாவிட்டால் உன் வாழ்க்கை வினாகிப் போனது என்பதை நினைவில் வை. புத்தனாகும் போது தான் ஒருவன் வாழ்வில் அருள் இலங்கும் அழகிருக்கும், அறிவிருக்கும், முக்கியத்துவம் இருக்கும், கருணை இருக்கும்.



Owned and Publishsed by: V.SRIRAM From 17/7A, Palaniappa Ist Street, 1st floor, Ayyanavaram, Chennai - 23. At Printed by him at Chennai Offset Printer, No: 19/1, 21/2 Kitapath Khan Phathr St, Ealles Road, Chennai-2. Editer:V.SRIRAM

ஓம் சாயி நமோ நம்! ஸ்ரீ சாயி நமோ நம! ஜெய ஜெய சாயி நமோ நம! சத்குரு சாயி நமோ நம!

நம்பிக்கை = பொறுமை

N.MANOHARAN, M.A.,
Share Market Technical Analyst & Portfolio Manager
+91-7449092577 mano_n123@yahoo.co.uk

BULL & BEAR TRADING

(ALWAYS PROFIT)

வாழ்வில் எளிய வருமான முறை



- பங்கு சந்தையில் புதிய வழியில் லாபமீட்டல்
- நிம்மதியான, எளிமையான மற்றும் கவலையில்லா வருமான வழி
- சேவை மனப்பான்மை அதிக லாப நோக்கமின்மை
- பாபாவின் அருளோடும், வழிகாட்டலுடனும், நீங்கள் எப்போதும் லாபத்தின் இருப்பீர்கள்.
- SCHEME-1 லாப பகிர்மானம் (Profit Sharaing) 70% : 30%
- SCHEME-2 For Every 1.5 Lakh Daily Rs.1000/- will be paid into your A/C Agreement Provided
- Registration Fees Rs.5,000/- & Agreement Provided for both Schemes

சீரடிக்கு போகலாம் வாங்க

மாதம் தோறும் 4 நாட்கள் சீரடி, சனிசிங்கனாபூர்

தத்தாத்ரேயர் ரேணுகாதேவி, மஹாகணபதி

ரூ.3,600/- 2 நாட்கள் உணவு

இரயில் பயணத்தில் சாப்பாடு அவர்களுடையது



5 நாட்கள்: சீரடி, மந்த்ராலயம் மற்றும் பல இடங்கள் ரூ.4,800/- 3 நாட்கள் உணவு

5 நாட்கள் பண்டரிபுரம், சீரடி மற்றும் பல இடங்களுக்கு ரூ.4,800/- 3 நாட்கள் உணவு

காசி யாத்திரை

மஹாலய அமாவாசை கயாவில் – பித்ரு பிண்ட தர்பணம்,
வருடத்திற்கு ஒருமுறை இராமேஸ்வரம் – காசி – இராமேஸ்வரம்
இரயில், பஸ், ரூம், உணவு, உடை சாஸ்திரிகள் செலவு உட்பட
12 நாட்கள்: ரூ.12,000/- உடுத்திய உடையுடன் வந்தால் போதும்

தொடர்புக்கு : திரு. சாயிபச்சை, செல்: 070925 00010, 080157 09652

மஞ்சு அசோசியேட்ஸ்

வணக்கம்

உங்களிடத்தில் உங்களுக்காக

வருமான வரி தாக்கல்

TAX AUDIT, NON TAX AUDIT & GST

வங்கி கடன்கள்

வீட்டுக்கடன், அடமானக்கடன்,
வியாபாரக் கடன்

இன்சூரன்ஸ்

LIC & STAR

இவற்றை சிறப்பாக செய்து தருகிறோம்
கடந்த 14 வருடமாக ஆதரவு தரும்
வாடிக்கையாளர்களுக்கு நன்றி!

H.35, பெரியார் காய்கறி மார்க்கெட், கோயம்பேடு
சென்னை -92. போன்:044-24793822

No.12, G.N.T. ரோடு, ரெட்ஹில்ஸ், சென்னை-52

தொடர்புக்கு:

L.KAMARAJ Cell:9382163822 / E-mail: kamaraj2306@gmail.com